பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 25 வெள்ளிக்கிழமை 09.03.2018 கதிர் 124

## ஞானசார தேரரின் பகிரங்கச் சவால்!

கொழும்பு, மார்ச் 09
நாட்டின் உண்மை நிலை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முடியுமானால் என்னுடன் விவாதத்துக்கு வாருங்கள் என அனைத்து முஸ்லிம் தலைமைகளுக்கும் சவால் விடுத்துள்ளார் வண. ஞானசார தேரர்.
பக்கம் 04

## ஜெனீவாவில் அரசுக்கு கடுமையான நெருக்கடி!

மாவை எம்.பி. சபையில் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 09
இலங்கையில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களின் தாக்கம் ஜெனீவாவில் எதிரொலிக்கும். ஐ.நா. கூட்டத்தொடரில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடி காத்திருக்கின்றது.
பக்கம் 18

# கிடுக்கிப்பிடி

* வன்முறைச் சூத்திரதாரிகள் மீது பாய்கிறது பயங்கரவாதத் தடைச் சட்டம்!
* பௌத்த இனவாத அமைப்பின் தலைவர் உட்பட 9 பேர் பொலிஸாரால் அதிரடியாகக் கைது!



கொழும்பு, மார்ச் 09
கண்டி இன வன்முறைகளின் முக்கிய சூத்திரதாரி என்று பொலிஸாரால் இனங்காணப்பட்டுள்ள சிங்கள இனவாத அமைப்பான மகசன் பலகாயவின் தலைவர் அமித் ஜீவன் வீரசிங்க உட்பட 9 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். பக்கம் 18

## இது ரகசியம் அல்ல!

யாழ். மாநகர சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு விகிதாசாரப் பட்டியலில் கிடைத்த இரண்டு இடங்களும் யாருக்கு என்று கடந்த நான்கு வாரங்களாக
பக்கம் 03

## வன்முறைச் சூத்திரதாரிகள் விவரங்கள் விரைவில் வரும்!

சபாநாயகர் கரு சபையில் தகவல்

கொழும்பு, மார்ச் 09
நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் செயற்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனச் சபாநாயகர்
பக்கம் 18

## இலங்கை அரசுக்கு பெரும் அவமானம்

ரணில் விசேட அறிக்கை



கொழும்பு, மார்ச் 09
நாட்டைச் சீர்குலைக்கும் சிறுதரப்பினர் மேற்கொண்ட வன்செயல்களால் சமூக மற்றும்
பக்கம் 04

# சர்வதேசச் சட்ட அதிகாரம் இலங்கை அரசு மீது பாயும்!

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஜெனீவாவில் கடும் எச்சரிக்கை



ஜெனிவா, மார்ச் 09
இலங்கையில் பொறுப்புக்கூறல் நகர்வுகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்த வகை செய்யும் விதத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.
இதற்காக உலகளாவிய சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு, தாம் உறுப்பு நாடுகளிடம்
பக்கம் 18

# காணாமற்போனோரைத் தேடி ஒரு வருடமாகப் போராட்டம்

முல்லைத்தீவில் நேற்று கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 09
காணாமற்போனோரைத் தேடி முல்லைத்தீவில் அவர்களது உறவினர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நேற்று ஓராண்டை எட்டியது. இதனை முன்னிட்டு நேற்று அங்கு மாபெரும் கவனவீர்ப்பு இடம்பெற்றது.
பக்கம் 18



## யாழ். மாநகர சபைக்குத் தெரிவான விஜயகாந்துக்கு இரு வருடச் சிறை

ரூ.7 லட்சம் இழப்பீடு செலுத்தவும் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 09
திருட்டு நகைகளை உடைமையில் வைத்திருந்தமை, அவற்றைக் கையாண்டமை ஆகிய குற்றங்களுக்காக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தலில் உறுப்
பக்கம் 18

## விஜயகாந்துக்கு பதவி கிட்டாது?

சிறைத் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகியிருக்கும் சுதர்சிங் விஜயகாந்த், அதன் காரணமாக யாழ். மாநகர சபை உறுப்பினராகப் பதவியேற்கும் தகுதியையும் இழந்திருக்கின்றார் எனச் சட்ட
பக்கம் 04

## போராட்டத்தில் ஈடுபட்ட தாயார் மயங்கிச் சரிவு!



முல்லைத்தீவு, மார்ச் 09
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் திடீரென மயங்கிச் சரிந்தார். அவரை அங்கிருந்தோர் தாங்கிப்
பக்கம் 18

## சரத் பொன்சேகாவை ஏமாற்றினார் மைத்திரி

சட்டம் ஒழுங்கு அமைச்சராக ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, மார்ச் 09
சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவில்லை. அந்தப்
பக்கம் 18

## முப்படையினரும் கண்டியில் குவிப்பு

கொழும்பு, மார்ச் 09
கண்டி மாவட்டத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்த முப்படையினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.
அங்கு பாதுகாப்புப் பணிக்காக நிறுத்தப்பட்டுள்ள படையின
பக்கம் 18



## பள்ளிவாசல்களுக்கு ராணுவப் பாதுகாப்பு

கிளிநொச்சியில் முன்னேற்பாடு



கிளிநொச்சி, மார்ச் 09
நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளை அடுத்துக் கிளிநொச்சியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு முன்பாகவும்
பக்கம் 18

## கண்டியில் ஊடரங்கு நேற்றுப் பகல் தளர்வு!

ஆயினும் மாலையில் அமுலுக்கு

கொழும்பு, மார்ச் 09
கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று முற்
பக்கம் 04

## வழமைக்கு கண்டி

கொழும்பு, மார்ச் 09
கண்டிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய பதற்றநிலை படிப்படியாகத் தணிந்து நேற்று அங்கு வழமை நிலை திரும்பியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.
கண்டி நிர்வாக மாவட்டத்தின் தற்போதைய நிலைமை சுமூகமாக காணப்படுவதாக மாவட்ட செயலாளர் எச்.எம்.பி. கிட்டிசேகர தெரிவித்தார்.
பக்கம் 04

# பொறுப்புக் கூறலிருந்து அரசை விடுவித்ததன் விளைவே இன்று முஸ்லிம்கள் மீதான இன வன்முறைக்குக் காரணம்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 09

பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அரசை விடுவித்ததன் விளைவே இன்று முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகளுக்குக் காரணம்.

இதன்மூலம் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளுக்கு சர்வதேசமும் பொறுப்பாளிகள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணிவெடித் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கி.சிவனேசனின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அங்கு உரைநிகழ்த்திய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையானது. சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனையின் அடிப்படையில் தோற்றம் பெற்றது அல்ல. அது திட்டமிடப்பட்ட இனவாதம். தமிழ் சமூகத்தை அழித்த சிங்கள பேரினவாதம் முஸ்லிம்கள் தங்களுக்கு சவாலாக வந்துவிடுவார்கள் என அஞ்சித் தற்போது திட்டமிட்டு அவர்களை அழிக்க முற்படுகின்றது.

முள்ளிவாய்க்காலில் தமிழர்களை இனப்படுகொலை செய்தபோது இலங்கை அரசு தண்டிக்கப்படவில்லை. சர்வதேச பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கையைப் பாதுகாத்தது. இதனால்தான் தாங்கள் என்னவும் செய்யலாம். தங்களைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற எண்ணம் அவர்கள் மீது மேலோங்கியது. இதன் வெளிப்பாடே இன்று முஸ்லிம் மக்கள் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல்களின் பின்னணி.

சிங்களவர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடியிருக்கிறார்கள். அதனால் தமிழர்கள் மீது சிங்களவர்களுக்கு கோபம் இருந்திருக்கலாம். ஆனால் முஸ்லிம் மக்கள் சிங்களவர்களுடன் நெருக்கத்தையே பேணிவந்தார்கள்.

முஸ்லிம் தலைவர்கள் இது வரை சிங்கள அரசுடன் இணைந்து வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதும் அபிவிருத்திகளைப் பெற்றுக் கொடுப்பதையுமே மேற்கொண்டுவந்தார்கள்.

சிங்களவர்களுக்கு எதிராக அணிதிரண்டதில்லை. ஆனால் இன்று சிங்களப் பேரினவாதிகளால் முஸ்லிம்கள் குறிவைக்கப்பட்டுள்ளார்கள். இக்கட்டான நிலைமையில் நாங்கள் புத்தி சொல்வதாக நினைக்கவேண்டாம்.

முஸ்லிம் தலைவர்களும் மக்களும் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணம் இது. அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் .- என்றார்.



இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் திருமதி கரீன் கலய்ஸ்னர் கிழக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் நிமல் சரத்சேனவை சந்தித்துள்ளார்.

கிழக்குக் கடற்படைக் கட்டளைத் தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதுடன் இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் இருவருக்குமிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறுக்கொள்ளப்பட்டன.

# சர்வதேச பெண்கள் தின நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி , மார்ச் 09

வடக்கு மாகாணத்தின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் நேற்றுக் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

காலை பத்து மணிக்கு கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக இருந்து பெண்கள் தின ஊர்வலம் அமைதியாக கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றது.

வடக்கு மாகாண பெண்கள் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக் கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பதில் தூதுவர் போல் கொட்பிறி இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் தூதுவர் றொபினா பி. மார்க்ஸ், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பெண்கள் அமைப்புகள், பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.








# காணாமற்போனோர் அலுவலகக் குழு சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 09

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவரும் அங்கத்தவர்களும் நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரியவைச் சந்தித்துள்ளனர்.

இலங்கையில் நாகரிகம் மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்திற்கு முக்கியமான பொறுப்பும் கடமையும் உள்ளது என்று இந்தச் சந்திப்பின் போது சபாநாயகர் தெரிவித்தார்.

பலர் தமது உற்றார் உறவினர்களை இழந்துவாடுகின்றார்கள். காணாமல் போனவர்கள் பற்றிய உண்மையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இவர்களுக்காக உண்மையைக் கண்டறியும் பொறுப்பை அலுவலகம் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

மனித உணர்வுகளுக்கு மதிப்பளித்து சமூகத்தில் சகலரும் அச்சமும் சந்தேகமும் இன்றி வாழும் உரிமையை உறுதி செய்வது அவசியம்.

அத்துடன் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டும் முயற்சிகளிலும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஒத்துழைப்பு வழங்க முடியும் எனச் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

# முடிவு காணப்படாத இனவாதத்தால் வெட்கப்படுகிறேன் - மனோ கணேசன்



கொழும்பு, மார்ச் 09

இனவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் போனதையிட்டு வெட்கப்படுகின்றேன் எனத் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோகணேசன் தெரிவித்தார்.

இனவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசின் அங்கத்தவராக இருந்து கொண்டு வெட்கப்படுகின்றேன், கவலைப்படுகின்றேன் எனவும் அமைச்சர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு பகிரங்கமாகவே கருத்து வெளியிட்டுள்ளார்.

# கொட்டாஞ்சேனை பகுதியில் சூடு; ஒருவர் பலி! இருவர் படுகாயம்



கொழும்பு, மார்ச் 09

கொழும்பு – கொட்டாஞ்சேனையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் படுகாயமடைந்திருந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 29 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

கொட்டாஞ்சேனை – ஹெட்டியாவத்தை, சுமித்ராராம வீதியில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மூவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கப்பப் பணம் வழங்காமை காரணமாகவே இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத ஆயுததாரிகளே துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் இருவரும் 34 மற்றும் 61 வயதுடையவர்களாவர். (ஐ)

# இரத்மலானையில் துப்பாக்கிச் சூடு! மாகாண சபை உறுப்பினர் காயம்!!

கொழும்பு, மார்ச் 09

இரத்மலானையில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மேல் மாகண சபை உறுப்பினர் அமல் சில்வா மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரத்மலானை – ஹொலுமாதுவ சந்தியில் காரில் வந்த ஆயுதக் குழுவினரால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

# மதுபானச்சாலைகளை மூடுமாறு வவுனியாவில் நேற்றுப் போராட்டம்

வவுனியா, மார்ச் 09

மதுபானச் சாலைகளை மூடுமாறு கோரிப் போராட்டம் ஒன்று நேற்று வியாழக்கிழமை வவுனியா பிரதேச செயலகம் முன்பாக சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் ஒருங்கிணைப்பாளர் ந.தேவகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு நடந்த இந்தப் போராட்டத்தில் உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணி அமைப்பும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

பெண்களின் உடல், உள, சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்களை சீரழிக்கும் மதுபானச்சாலைகள் மற்றும் கள்ளுக்கடைகளை இழுத்து மூடு என்ற பிரதான கோசத்துடன் இந்தப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், 'உழைக்கும் பெண்களை நிம்மதியாக வாழ விடு', 'பெண்களின் வாழ்வுரிமையை சிதைக்கும் சாராயக்கடைகளை இழுத்து மூடு', 'கிராமங்களில் போதைப்பொருள்களை உடனே கட்டுப்படுத்து', 'பெண்களுக்கு கடன் திட்டமா? தற்கொலை திட்டமா?', 'கேரளா மாவா பாக்கை தடை செய்' போன்ற பதாதைகளை தாங்கியிருந்தனர். (ஐ-100)

# சிவசக்தி ஆனந்தன் சபையில் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 09

நாடாளுமன்றில் தாம் பேசுவதற்கான உரிமை மறுக்கப்பட்டு வருகின்றமையானது, ஒட்டுமொத்த வன்னி மக்களினதும் குரல்வளையை நசுக்கும் செயலாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் பேசுவதற்கான உரிமை மறுக்கப்படுகின்றமை தொடர்பாகச் சபாநாயகருக்குக் கடந்த 21ஆம் திகதி தாம் எழுத்துமூலம் அறிவித்திருந்த போதும், தமக்கு எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது சபை அமர்வுகளுக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்படுமெனக் குறிப்பிட்டார். (ஐ)

# அமைதியை நிலைநாட்ட உடனடியாக நடவடிக்கை

## சட்டம், ஒழுங்கு அமைச்சராக பொறுப்பேற்ற மத்தும பண்டார

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் அமைதியை நிலை நாட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட பின்னர் கொழும்பு கங்காராம விகாரைக்குச் சென்று ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

பண்டைய காலத்தில் இருந்தே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் அமைதியான இலங்கையின் இனத்தவர்களாக வாழ்ந்தனர். எனினும் சில அடிப்படைவாத மற்றும் இனவாதக் குழுவினர் இந்த அமைதியான சூழலை அழிக்கத் திட்டமிட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். அதன் நீட்சியாக நாட்டுக்கு தற்போது அசாதாரண சூழல் உருவாகியுள்ளது.

இப்படியான நெருக்கடியான சூழலில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சை எனக்கு வழங்கியமை குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக அரசியலில் ஈடுபட்டு வரும் நான் அந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுவேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிறு தரப்பினரின் அடிப்படைவாத, இனவாத வேலைத்திட்டங்களில் சிக்காது, பொறுமையாகவும் சிந்தனையோடும் செயற்படுமாறு முழு நாட்டு மக்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்த எதிர்பார்த்துள்ளேன் – என்றார். (ஐ)

# எனக்குப் பதவி கிடைப்பதை ராஜபக்ஷாக்கள் எதிர்த்தனர்

## சரத் பொன்சேகா ஆவேசம்

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பதவி தமக்குக் கிடைப்பதை ராஜபக்ஷாக்கள் எதிர்த்தனர் என்றும், அமைச்சு பதவி வழங்கப்பட்ட விதம் குறித்துத் தாம் அதிருப்தியடைகிறார் எனவும் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வத்தளை ஹுணுப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற சமய வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உரிய இடத்தில் உரிய தலைமைத்துவம் இல்லாத காரணத்தினாலேயே கண்டியில் வன்முறைகள் நடந்துள்ளன. நான் அந்த இடத்தில் இருந்திருந்தால், அப்படியான சம்பவங்கள் நடந்திருக்காது.

எனக்குச் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதை ராஜபக்ஷவாதிகள் எதிர்த்தனர். நான் அப்படியான பதவியை ஏற்றால், சரியாகக் கடமையைச் செய்வேன்என்றுராஜபக்ஷவாதிகள்புரிந்துவைத்துள்ளனர்.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நான் நியமிக்கப்பட்டால் சட்டம் சரியாக அமுல்படுத்தப்படும். அப்போது ராஜபக்ஷ குழுவுக்குச் சவாலாக அமையும் என்பதை அவர்கள் அறிவார்கள். ஐக்கிய தேசியக்கட்சியில் எவரும் என்னை எதிர்க்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் எனக்கு வாழ்த்து தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் என்னை வாழ்த்தினார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவான தரப்பினரே பயந்து அச்சத்தில் நடுக்கம் கொண்டனர்.

அந்தப் பதவி தற்போது ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது பற்றி அவருக்கும் முன்கூட்டியே தெரியாது. ஜனாதிபதி செயலகத்துக்கு வருமாறு கூறித் திடீரென அமைச்சுப் பதவியைக் கொடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் குறித்து நாங்கள் கடும் அதிருப்தியும் அருவருப்பையும் தெரிவித்துக் கொள்கிறோம். எதிர்காலத்தில் நாங்கள் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் – என்றார். (ஐ)



# இனவாதத்துக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டித்தும், இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டுவர பெரிதும் பாடுபட்ட புரவெசி பலய, இனவாதத்திற்கு எதிரான பிரஜைகள் ஆகிய அமைப்புக்கள் இதனை ஏற்பாடு செய்தன. இதில் பலர் பங்கேற்றனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடித்து வந்த இழுபறி ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

வட்டாரத் தேர்தலில் தோல்வியுற்றோரை விகிதாசாரப் பட்டியல் இடங்களுக்கு நியமிப்பதில்லை எனக் கூட்டமைப்புத் தலைமையிடமிருந்து தகவல் முதலில் வெளியிடப்பட்டாலும் பின்னர் தமக்கு வேண்டியவர்களை நியமிப்பதற்காக அந்த விதிகளைத் தாமே தளர்த்திக் கொண்டது கூட்டமைப்புத் தலைமை என அறிய வந்தது.

கடந்த தடவை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அம்மணி ஒருவர் இந்த முறை வடமராட்சியில் வட்டாரத்திலும் தோல்வியுற்றுவிட்டாராம். அவரை விகிதாசாரப் பட்டியல் முறைமை மூலம் உறுப்பினராக்க சுமந்திரன் விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது.

அந்த இடைவெளியைப் பயன்படுத்தி, யாழ். மாநகர சபையில் தனக்கு விகிதாசாரப் பட்டியலில் கிடைத்த மகளிர் இடத்துக்கு வட்டாரத் தேர்தலில் தோற்று மூன்றாம் இடத்துக்குச்சென்ற தனது வேட்பாளரான ஒரு பெண்ணை – தமிழரசுக் கட்சியின் பட்டியலில் – ரெலோ நியமிக்கின்றது என்று தகவல். இதனால் விகிதாசாரப் பட்டியலில் இடம் பெற்றிருந்த – போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்த – முக்கிய பெண்மணி ஒருவர் ஓரம் கட்டப்பட்டுவிட்டார்.

யாழ். மாநகர சபையில் விகிதாசாரப் பட்டியலில் கிடைத்த மற்றைய இடம் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான குலநாயகத்துக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவர் ஒதுங்கிக் கொள்ள, அந்த இடம் சி.வீ.கே.சிவஞானத்தின் 'எடுபிடி' எனக் கருதப்படும் ஒருவருக்குக் கிட்டுகின்றது. அவர் ஒரு செய்தியாளர் என்று கூறப்பட்டாலும், அத்துறையில் அவர் செய்த குசும்புத்தனங்களால் 'கோட்டா' என்று (கோட்டாபய ராஜபக்ஷ போல விநாச வேலை செய்வார் என்ற கருத்தில்) ஊடக வட்டாரங்களில் அழைக்கப்படுபவர். அவருக்கு விகிதாசார வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுப்பதற்கே அவர் அதுவரை சேர்ந்து பணியாற்றியிருந்த – தமிழரசுக் கட்சியின் பத்திரிகையான – ஊடகத்தினால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும் சி.வீ.கே.சிவஞானம் தமது செல்வாக்கால் அவரைப் பட்டியலில் சேர்த்து, இப்போது 'வெற்றிகரமாக' உறுப்பினருமாக்கி விட்டார் எனத் தெரிகிறது.

பல ஊடகங்களில் இவர் பணியாற்றியுள்ள போதிலும் எந்த ஊடகத்திலும் நல்ல பெயரெடுத்தவர் அல்லர். எந்த அரசியல்வாதியும் நீண்ட காலம் இவரைக் கிட்ட வைத்திருந்தவர் அல்லர். முன்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட இவரை நெருக்கமாக வைத்திருந்தார். ஆனால் இப்போது கிட்டக் கூட நெருங்கவிடுவதில்லை. அவ்வளவு தூரம் நம்பிக்கையை கெடுத்துக் கொள்ளும் பேர்வழி. செய்திகளைத் தேடி எடுப்பதற்காக நம்பிக்கைத் தன்மையைத் தகர்ப்பவர்களை யார்தான் கிட்டே எடுப்பர்?

முதல்வர் விக்கி ஒதுக்கியமையால் சிவஞானம் சேர்த்துக் கொண்டாரோ தெரியவில்லை. சிவஞானத்தார் எப்போது பாடம் படிக்கப் போகின்றாரோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

மறுபுறத்தில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவி தேடி வந்தும் அதனைத் தமிழரசுக் குலநாயகம் உதாசீனம் செய்தமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

அதில் ஒன்று தமிழரசுப் பட்டியலின் தலைமை ஆர்னோல்டுக்கு என்பது. அந்தப் பொடியனுக்குக் கீழ் நாம் உறுப்பினராவதா என்ற எண்ணம் குலநாயகத்துக்கு.

இப்போது அவர் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிறாராம். சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட இருவரும் ஏற்கனவே பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர்கள். சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா – முல்லைத்தீவில்; துரைரட்ணசிங்கம் – திருகோணமலையில்.

தோற்றவர்களைத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தேசிய பட்டியல் வேட்பாளர் வரிசையில் உள்ளவர்களுக்கு அந்த இடத்தை வழங்குங்கள் என்று சம்பந்தனை எழுத்தில் – கடிதம் மூலம் – கேட்கிறார் குலநாயகம்.

அதில் விஷேசம் என்னவென்றால், அந்த பட்டியலிலும் குலநாயகத்தின் பெயர் உள்ளது என்பதுதான்.

ஆக, தேர்தலில் போட்டியிடாமல் – விகிதாசாரப் பட்டியல் மூலம் கிடைக்கும் யாழ். மாநகர சபை உறுப்பினர் பதவியைப் புறம் ஒதுக்கிவிட்டு, தேசியப் பட்டியல் மூலமான எம்.பி. பதவிக்கு அவர் கண் வைக்கின்றார் என்கின்றன தமிழரசுக் கட்சி உள்வட்டாரங்கள்...!

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்று நான் கூறுவது சரிதானே...!

-மின்னல்-

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சுமந்திரனின் ஆதங்கப் பேச்சு

**கடைசியில் ஒருவாறு நல்லாட்சி அரசின் உண்மை முகத்தை வெளிப்படையாகவே பிய்த்து உதறும் நிலைக்கு வந்துவிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். நல்லாட்சி அரசுத் தரப்பின் தலைவர்களை நாடாளுமன்றத்தில் ஒரு பிடிபிடித்திருக்கின்றார் அவர்.**

***"அரசுத் தரப்பினர், ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்மார் எவருக்குமே முதுகெலும்பு இல்லை. சிறுபான்மையினருக்கு நீதி செய்யவும், அவர்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படும் போது அதற்காகக் கிளர்ந்தெழவும் உங்களுக்குத் திராணி இல்லை. அதனால் உங்களுக்கு இந்த நாட்டை ஆளுவதற்கும் உரிமை இல்லை."*** **- என்று அவர் கூறியிருக்கின்றமையைப் பார்க்கும் போது, ஏதோ வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், தமது வழமையான பேச்சுக்காகத் தயாரித்து வைத்திருந்த உரையை சுமந்திரன் எம்.பி. தவறுதலாக மாறி எடுத்துக்கொண்டு போய் நாடாளுமன்றத்தில் தமது உரையாக வாசித்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.**

**ஒரு சமரசத் தீர்வுக்காக - இணக்க ஏற்பாட்டுக்காக - தமது தமிழ் மக்கள் தரப்பில் பலரின் எதிர்ப்புக்கள், ஏச்சுப் பேச்சுகள், நிந்தனைகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், துணிச்சலுடன் உச்ச பட்சம் இறங்கிச் சென்று தென்னிலங்கை அரசுக்கு சமாதானக் கைநீட்டியவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும்.**

**தென்னிலங்கைத் தலைவர்களை - குறிப்பாக இந்த நல்லாட்சி அரசின் தலைவர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் - அதிகம் நம்பி, அதற்காகத் தமது கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்புக்களை எதிர்கொண்டபடி சமாதான முயற்சிகளுக்காக அதிக விட்டுக் கொடுப்புகளுக்கு இடமளித்தபடி, நம்ப நடந்தவர்கள் அவர்கள்.**

**இந்தச் சமாதான முயற்சியில் அவர்களது சக கூட்டமைப்புத் தலைவர்கள் மட்டுமல்லர், அவர்களது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சக தலைவர்களே அந்த இருவருடனும் சேர்ந்து பயணிக்கத் திராணியின்றி, தூர விலகி நின்றபோது, தாங்கள் இருவர் மட்டுமே பொறுப்பெடுத்து இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.**

**அமைதித் தீர்வுக்கு - ஜனநாயக வழியிலான சமாதான ஏற்பாட்டுக்கு - இன நல்லிணக்கத்துக்கு - புரிந்துணர்வு முயற்சிகளுக்கு - தமிழர் தரப்பு என்றுமே எதிரானது அல்ல என்று தென்னிலங்கைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் காட்டுவதற்காக மனச் சுத்தியோடும் நிறைந்தளவு விட்டுக்கொடுப்போடும் இறங்கி வந்தவர்கள் அவர்கள்.**

**தமிழர் தரப்பில் எதிரிடையாக இருக்கும் கட்சிகள் மட்டுமல்ல, தங்களுடன் கூட்டமைப்பாகக் கூட்டுச் சேர்ந்திருக்கும் தமிழ்க் கட்சிகளும் - ஏன், தங்களின் தமிழரசுக் கட்சி கூட - இந்த முயற்சியில் தாங்கள் தென்னிலங்கையால் ஏமாற்றப்பட்டால் முழுப் பொறுப்பையும் தங்கள் இருவர் தலை மீதும் சுமத்தி அரசியல் பந்தாடத் தயாராகக் காத்திருக்கின்றன என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டும், அந்த விஷப் பரீட்சையில் தங்கள் மனச்சாட்சிக்கு இணங்க இறங்கியவர்கள் அவர்கள்.**

**அப்படித் தங்கள் அரசியல் வாழ்வு தொடர்பில் மிகப்பெரும் 'றிஸ்க்' எடுத்த ஒருவரின் ஆதங்கத்தில் எழுந்த சீற்றமாக இந்த உரையைப் பார்க்க முடியம்.**

**தென்னிலங்கை அரசியலில் கோலோச்சும் பேரினவாத மேலாதிக்கப்போக்கு என்ற அநீதியான செல்நெறியை விட்டு விலகி, நீதி செய்யும் அரசியல் துணிவு, திராணி, உறுதிப்பாடு தெற்கில் எந்த அரசுத் தலைமைக்கும் வரப்போவதில்லை என்ற பட்டறிவின் விளைவாக எழுந்த நியாயமான எரிச்சலையே சுமந்திரன் தமது உரையில் கொட்டித் தீர்த்திருக்கின்றார்.**

**நல்லிணக்கத்துக்கும், புரிந்துணர்வுக்கும், பொறுப்புக்கூறல் கடப்பாட்டுக்கும், காலா காலமாகப் பாதிப்புற்றிருக்கும் சிறுபான்மையினருக்கு நீதி செய்யும் விடயத்திலும், இந்தப் பேரினவாத மேலாதிக்க சிந்தனைப் போக்கே எப்போதும் இடைஞ்சலாக இருக்கின்றது, அந்தப் போக்கிலிருந்து எந்த சிங்கள அரசுத் தலைமையும் மாறவே போவதில்லை என்ற யதார்த்தப் புறவுண்மையை உணர்ந்தமையால் எழுந்த நியாயமான சீற்றப் பேச்சே இது.**

**இந்த இலங்கைத் தீவில் 1915 இல் வெடித்த சிங்கள - முஸ்லிம் கலவரங்களின் பின்னர், இந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இலங்கை நாட்டையே ஆழிக் கூத்தாக ஆட்டிப் படைத்த பல கலவரங்கள் சிறுபான்மையினருக்கு எதிராக அரங்கேறிவிட்டன. இவை எல்லாவற்றுக்கும் பின்னால் ஒரே அடிப்படை சூட்சுமம் பொதிந்திருப்பது நோக்கற்பாலது.**

**அது, இத்தகைய கலவரங்களைத் தூண்டி, கட்டவிழ்த்து, முன்னெடுத்த பேரினவாத சூத்திரதாரிகள் கைது செய்யப்படமாட்டார்கள், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது, தண்டனை வழங்கப்படமாட்டாது என்ற தெளிவான - நம்பிக்கையான - திடமான - உறுதிப்பாடு நீடிப்பதேயாகும்.**

**சுருக்கமாகக் கூறுவதானால், சிறுபான்மையினருக்கு எதிரான அராஜகங்கள் விடயத்தில் பொறுப்புக்கூறலை நிலை நிறுத்துவதற்கு பேரினவாத அரசுகள் எப்போதுமே இடமளிக்கவே மாட்டா, அதில் உறுதியாகவும் உருக்குப் போன்ற இறுக்கமான நிலைப்பாட்டிலும் அவை உள்ளன. - என்பதுதான்.**

**பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் விடயத்தில் தாங்கள் எடுத்த முயற்சி, நாய் வாலை நிமிர்த்தும் எத்தனம் என்பதைப் புரிந்து கொண்டதால் சுமந்திரனுக்கு எழுந்த ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாகவும் இந்த உரையைப் பார்க்கலாம்.**

**எது, எப்படியென்றாலும், இதனை நேர்மைத் துணிவுடன் நாடாளுமன்றத்தில் அப்பட்டமாக அறிவித்த சுமந்திரன் அதற்காகப் பாராட்டுக்குரியவரே.**

# முறுகலை ஏற்படுத்தும் குழுக்கள் கண்டிக்குள்!

## அவற்றைக் கைது செய்ய நடவடிக்கை என்கிறார் இராணுவத் தளபதி மகேஷ்

கொழும்பு, மார்ச் 09

இன, மதவாதத்தைத் தூண்டி மோதல்களை ஏற்படுத்துவதற்காக வேறு பிரதேசங்களில் இருந்து கண்டி மாவட்டத்துக்குள் நுழைந்திருக்கும் நபர்களை வெளியேற்றும் அதிரடிக் கைது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள் என என இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

வன்முறைகள், கலவரங்களை மேற்கொள்ள மக்களைத் தூண்டவும், அதற்குத் தலைமை வகிக்கவும் வெளியிடங்களில் இருந்து கண்டி மாவட்டத்துக்குள் நுழைந்திருப்பவர்கள் பற்றி புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, மல்வத்துபீட மகாநாயக்கர் வண.திப்பட்டு வாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக நேற்று வியாழக்கிழமை முற்பகல் கண்டிக்கு விஜயம் செய்தார்.

மகாநாயக்க தேரரிடம் நிலைமையைத் தெளிவுபடுத்திய இராணுவத் தளபதி, அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கும் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கற்றறிந்த எமது மக்களில் சிலர் இவ்வாறான சூழ் நிலையை நன்கறிந்துகொள்ளாமல் மீண்டும் இந்த நாட்டைப் பின்நோக்கி நகர்த்த எடுக்கும் முயற்சிகள் குறித்துக் கவலையடைகின்றேன். தற்போது ஒருசிலர் தனிப்பட்ட நோக்கம் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காகச் செயற்பட்டு வருகின்றனர்.

கண்டிப் பகுதியில் அகிம்சைப் போக்குடைய கௌரவமான மக்களே வாழ்கின்றனர். இவர்களைத் தூண்டுவதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் இங்கே பதுங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக இராணுவம் உட்பட முப்படையினரும் மேற்கொள்ளவேண்டிய அனைத்துச் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். வெளிப் பகுதிகளில் இருந்து கண்டி மாவட்டத்துக்குள் நுழைந்து குழப்பம் விளைவிப்போர் தொடர்பில் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இப்படிப்பட்ட பிரச்சினையை உருவாக்குகின்றவர்களைத் தடுத்து இனியும் இப்படி உருவாகாமலிருக்க நடவடிக்கை எடுப்போம். எனவே இப்படியான நிலைமையை உருவாக்குவோர் இனியும் அதனைச் செய்யாமலிருக்கச் சிறந்த பாடமொன்றைக் கற்றுக்கொள்வார்கள் என கூறிக்கொள்ள விரும்புகிறேன். – என்றார். (ஐ)

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார ரீதியாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சேதம் மிகவும் பாரதூரமானது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மற்றும் அதனை அண்மித்த சில பகுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:–

சர்வதேச ரீதியாக நாடு அவமதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

கண்டிக்கு அருகில் சில பிரதேசங்களில் நடந்த வன்முறைகளால் இலங்கையின் சுற்றுலா தொழில்துறைக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் சிறிய தரப்பினர் திட்டமிட்டு ஏற்படுத்திய நிலைமை. இந்தச் சம்பவங்கள் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் சக வாழ்வுக்குத் தடையை ஏற்படுத்தவில்லை.

30 வருடங்கள் கொடூரமான யுத்தம் காரணமாக கஷ்டங்களை அனுபவித்த மக்களுக்குச் சமாதானமாகவும் சக வாழ்வுடன் வாழும்தேவையே இருக்கின்றது.

நாட்டு மக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பது அரசு என்ற வகையில் எமது கட மையும் பொறுப்புமாகும். அதனை நாங்கள் அர்ப்பணிப்புடன் செய்வோம்.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாத்து, சக வாழ்வுடன் செயற்படப் பங்களிப்புகளைச் செய்யுமாறு அனைத்து மக்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் அனைவரும் ஒரு நாட்டினராகவும் ஒரே இனத்தவராகவும் செயற்பட்டு, இந்தத் துரதிஷ்டவசமானநிலைமையில் இருந்து மீள நடவடிக்கை எடுப்போம்.

மேலும் உயிரிழப்புகள் மற்றும் சொத்துச் சேதங்களுக்கு இழப்பீடுகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். இழப்பீடுகளைத் துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். – என்றுள்ளது. (ஐ)

### வழமைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட செயலாளரின் இந்த அறிவிப்பையடுத்து, கண்டி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாவை மேற்கொள்வதற்குரிய தகுந்த சூழ்நிலை இருப்பதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக கண்டியில் இடம்பெற்ற வன்முறைகளையடுத்து முப்படையினரும் களப்பணிக்குஅனுப்பப்பட்டமையுடன் பொலிஸ் மற் றும் விசேட அதிரடிப்படை ஆகிய தரப்பினரும் உச்சக்கட்டப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 18 மணித்தியால காலப்பகுதிக்குள் எந்தவித மோதல் சம்பவமும் கண்டியில் இடம்பெறவில்லை என நேற்று இரவு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

### விஜயகாந்துக்கு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின்படி, ஒரு வருடச் சிறைத் தண்டனைக்கு உள்ளாகும் ஒருவர் அத்தண்டனைக் காலம் முடிவுற்று அடுத்த ஏழாண்டுகள் வரை உள்ளூராட்சிச்சபைஉறுப்பினராகவோ அல்லது இது தொடர்பான தேர்தலில் வாக்களிக்கவோ உள்ள உரிமையை இழக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் குற்றத் தீர்ப்புக்கு எதிராக அந்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் –

அல்லது நேரடியாக மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதன் மூலம் –

அவர் மேன்முறையீடு செய்ய முடியும். அந்தமேன்முறையீட்டின் ஒரு பகுதியாக மேற்படி மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை முடிவுறும் வரையில் குற்றத் தண்டனையிலிருந்து பிணையில் அவர் வெளிவர முடியும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆனால், மேற்படி நீதிவான் நீதிமன்றத்தின் குற்றத் தீர்ப்பை அத்தகைய மேன்முறையீட்டு விசாரணை முடியும் வரை இடைநிறுத்தும் உத்தரவு ஒன்றை, அந்த நீதிவான் நீதிமன்றிலோ அல்லது மேல் நீதிமன்றிலோ அல்லது அடிப்படை உரிமைமீறல் மனு மூலம் உயர் நீதிமன்றத்திலோ பெற்றுக் கொள்ளாத வரை அவர் மாநகர சபை உறுப்பினராக முடியாது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அந்த உறுப்பினர் பதவியேற்றற்குரிய கால அவகாசத்துக்குள் அதைஅவர்செய்யாவிட்டால்அவர் தமது மாநகர சபைப் பதவியை இழந்தவராவார். அத்தகைய நிலையில் அவர் தேர்தலில் போட்டியிட்ட கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர், தங்களின் யாழ். மாநகர சபை வேட்பாளர் பட்டியலில் இருந்து ஒரு வரை அந்த இடத்துக்கு மாநகர சபை உறுப்பினராக நியமிக்கும் நிலைமை ஏற்படும்எனவும்சட்டவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

### கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகல் 10 மணியுடன் நீக்கப்பட்டது.

இன வன்முறைகளால் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 4 மணிவரை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அடுத்தும், பொது மக்கள் அத்தியாவசியப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், ஊரடங்குச் சட்டத்தை முற்பகல் 10 மணியுடன் நீக்க ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, நேற்று முற்பகல் 10 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. ஆயினும், மீண்டும் நேற்று மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தையும் மறுஅறிவித்தல் வரை மூடுமாறு, மதுவரித் திணைக்கள ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

### ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக இன்று மாலை 5 மணி வரை கால அவகாசம் தருவதாகவும், மனதில் தைரியம், உறுதி இருந்தால் பகிரங்க மேடையில், அனைத்துஊடகங்களுக்கு முன்பாகவும் என்னுடன் விவாதத்திற்கு வாருங்கள் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில்நேற்றுஇடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்த நாட்டிலுள்ள உண்மைச் சம்பவங்களைச் சாட்சி, ஆதாரங்களுடன் நான் நிரூபித்துக் காட்டுகின்றேன்.

கடந்த அரசால் செய்ய முடியாததைச் செய்வதாகத் தெரிவித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போது இந்த அரசால் எதுவும் முடியாத நிலையில் மீண்டும் மஹிந்த மீது பழி சுமத்துகின்றார்கள். – என்றார். (ஐ)

### நாளை

**10.03.2018**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : மூலம் முழுவதும்
திதி : அட்டமி மு.ப. 8.22 வரை

சுபநேரம் : 3.23 – 4.53 வரை
இராகுகாலம் : 9.23 – 10.53 வரை

# கலவரங்களுக்கு ரணிலும் பொலிஸாருமே பொறுப்பு

## கூறுகிறது பொதுபலசேனா

கொழும்பு, மார்ச் 09

கண்டி தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கான முழுப்பொறுப்பையும்பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவும், பொலிஸாருமே ஏற்கவேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அமைச்சர் மனோ கணேசனும் பெருமளவு பணத்தை விரயம் செய்து தோல்வி கண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர், உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முஸ்லிம் அமைச்சர்கள் உட்பட அனைவரையும் பேச்சுக்கு வரும்படியும் அழைப்புவிடுத்தார்.

கண்டி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றைப் பொதுபலசேனா அமைப்பு கொழும்பில் கடந்த செவ்வாயன்று நடத்தியது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே வண.ஞானசார தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எவரும் கலவரத்தில் ஈடுபடவேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கியமையோடு நல்லிணக்கம் பற்றி அரசுக்குக் கற்றுக்கொடுக்கவும் தயாராக உள்ளோம்.

முதலாவதாக கண்டியில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கான முழுப்பொறுப்பையும் பிரதமரும், பொலிஸாருமே ஏற்றுக்கொள்ள வேண்டும். தாக்குதலை மேற்கொண்ட குழுவினரை கைது செய்தமையையும், விளக்கமறியலில் வைக்கப்பட்ட தகவலையும் நாட்டுக்குப் பொலிஸார் வெளிப்படுத்தியிருந்தால் இளைஞர்கள் இடையே ஆவேசம் ஏற்பட்டிருக்காது. பொலிஸார் இந்தத் தகவலை வெளியிடா திருந்தமை தவறு என்பதையே சுட்டிக்காட்டுகிறோம். தகவல்கள் ஊடகங்களுக்கும், மக்களுக்கும் வழங்கப்படவில்லை.

இன்று எமது கடமையானது யார் மீதும் தாக்குதல் நடத்துவதோ அல்லது கடைகளை உடைத்து நொருக்குவதோ அல்ல. அது முட்டாள்தனம். சிலர் இன்று வந்து சேதங்களை ஏற்படுத்தி நாளை சென்றுவிடுவார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நாங்கள் உதவவேண்டும். யாரும் குழப்பமடைய வேண்டாம். குழப்பமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாடே பின்நோக்கி நகர்கிறது. இந்நிலையில் இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு குழப்பநிலை ஏற்படுகிறது. எனவே முஸ்லிம் மக்களுக்கும், குழப்பமடையும் சண்டியர்களுக்கும் அனைவருக்கும் நாங்கள் தயவுசெய்து கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். அனைத்தையும் நிறுத்திவிடுங்கள்.

அமெரிக்கத் தூதரகம் உட்பட மேற்குலகத் தூதரகங்கள் சந்திரிகா அம்மையாருக்கும், மனோ கணேசனுக்கும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப பெருந்திரளான பணத்தை வழங்கிவருகின்றன. 3 வருடங்களில் அந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடிந்ததா? நல்லிணக்கம் என்ற பெயரில் தொலைக்காட்சி ஆரம்பித்தோ அல்லது திரைப்படங்கள் மற்றும் கலந்துரையாடல், செயலமர்வுகளை நடத்தியோ அதனை முழுமைப்படுத்த இயலாது.

நல்லிணக்கம் என்ன என்பதை உலமாக்களுக்கும், அதேபோல அரசாங்கத்திற்கும் கற்றுக்கொடுக்க எம்மால் முடியும். ஜிந்தோட்டை, அளுத்கம பகுதிகளில் நாங்கள் அதனை ஏற்படுத்தியிருக்கின்றோம். முஸ்லிம் அமைச்சர்கள் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும் ஓர் அழைப்பைவிடுக்கின்றோம். அனைவரும் ஒரு மேசைக்கு வந்து பேச்சு நடத்துவோம். முன்பு பொதுபல சேனாவை ஏசினார்கள். ஆனால் அளுத்கம சம்பவம் தொடர்பில் ஆணைக்குழு அமைத்து உண்மையை கண்டறியும்படி நாங்கள் இன்றும் வலியுறுத்தியே வருகின்றோம். – என்றார். (ஐ)




## பதிவுகளை மேற்கொள்ளவும்

கொடிகாமம், மார்ச் 09

தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் ஹப்பன் சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருப்போர் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் தரம் – 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் ஹப்பன் சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணி வந்திருக்கக் கூடியவர்களுமான மாணவர்களே தமது ஹப்பன் சிறுவர் சேமிப்புப் புத்தகத்துடன் தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 021 2050265 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## வர்த்தகருக்குச் சொந்தமான மர ஆலைக்குத் தீ வைப்பு

### கண்டியில் சம்பவம்



கொழும்பு, மார்ச் 09

கண்டி – அக்குரணை, அம்பதென்ன, வெலேகட, பூஜாபிட்டிய வீதியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான மரஆலை தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இனவாதிகள் தீயிட்டுக் கொழுத்திய சம்பவத்தை கேள்வியுற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன், குறித்த இடத்திற்கு விரைந்து தீயை அணைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், தீயை முற்றாக அணைத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அந்த இடத்திலேயே தங்கி இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் தாய் நூல் வெளியீட்டு விழா

வவுனியா, மார்ச் 09

செல்வி.சோபிதா முகுந்தன் எழுதிய, தாய் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணியளவில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

மங்கலவிளக்கை ச.ஜெயதாசன் தம்பதி ஏற்றிவைக்க, வரவேற்புரையை ந.முகுந்தன் நிகழ்த்துவார். தலைமை யுரையைத் தொடர்ந்து நூல் வெளியீடும் முதல்,சிறப்புப் பிரதிகள் வழங்கலும் இடம்பெறும்.

நூல் நயவுரையை வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்ச்சுடர்ந.பார்த்திபன்வழங்க, ஏற்புரையை நூலாசிரியரும் நன்றியுரையை திருமதி. முகுந்தன் தபோதினியும் நிகழ்த்துவார்கள்.

## பிரபாவின் படத்துடன் வாழ்த்து: கைதாகிய இருவரும் மறியலில்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் மற்றும் புலிகளின் இலச்சினை அடங்கிய 2018ஆம் ஆண்டுக்கான புதுவருட வாழ்த்துகளைப் பேஸ்புக்கினூடாகப் பரிமாறிய இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றின் மேலதிக நீதிவான் தனுஜா லக்மாலி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுத்தொடர்பில், இரத்தினபுரியைச் சேர்ந்த செவன் தினேஷ்குமார், விஜேகுமார் விதூன் ஆகிய இருவரும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

2007ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச இணக்கப்பாட்டுச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட இருவருக்கும் எதிராக, தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் வெறுப்புணர்வு, அமைதியின்மையை ஏற்படுத்த முயன்றுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இரத்தினபுரியைச் சேர்ந்த எதிரிமுனி பத்தும் ரணசிங்க என்பவரால் இரத்தினபுரிமாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்த்னவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய அத்தியட்சகரால் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

விதோன் ரொக்ஷி எனப் பெயர் கொண்ட பேஸ்புக் கணக்கு தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், தினேஷ்குமார் என்பவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், புலி இலச்சினை, சீருடையில் இருக்கும் அவ்வமைப்பின் தலைவர்கள், தமிழ் ஈழ வரைபடம் என்பன தினேஷ்குமார் என்பவரின் வாழ்த்துப் படத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



தவக்கால சிந்தனை

## கொடுத்தல்

“கொடுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாக அளந்து உங்கள் மடிகளில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கு அளக்கப்படும்” (லூக்கா 6.38).

இரக்கம், மன்னிப்பு, கொடுத்தல், பகிர்தல் ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து நாம் வாழும் பொழுது எமது வாழ்வு இறைவனுக்கு ஏற்புடையதாகின்றது. நலமான, வளமான வாழ்வுக்கு ஒரேயொரு வழி கொடுக்கும் கலையினில் பயிற்சி பெற்று நடைமுறைப் படுத்துவதாகும்.

எம்மிடமுள்ளவற்றைத் தாராள மனத்தோடு கொடுக்கும் பொழுது, பாரபட்சமின்றி பகிர்தலில் ஈடுபடும் பொழுது ஆரோக்கியமான ஆளுமைச் சூழல் உருவாக்கப்படுகின்றது.

இறைக்க இறைக்க ஊறும் கிணறு போல கொடுக்கக் கொடுக்க உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் ஆறாய் பெருக்கெடுத்தோடும். கொடுத்து வாழும் பண்பில் நாம் வளரும் பொழுது வாழ்வு வளமாகும். உள்ளன்போடு கொடுத்தல், உவகையோடு கொடுத்தல், கொடுக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதும் தாமதமின்றிக் கொடுத்தல், பரிதாப உணர்வைக் கடந்து கொடுத்தல், எதிர்பார்பின்றிக் கொடுத்தல் போன்ற தூய கொடுத்தலின் சிறப்பம்சங்களாகும். தவி வழங்குங்கள்.

கொடுப்பாருக்குக் குறையில்லை. குறையாத மகிழ்வும் குன்றாத அன்பும் கொண்டு அன்றாடம் நன்றாக வாழ வேண்டுதல் செய்வோம்.

# சூறாவளியால் பாதிப்புற்ற வீடுகளை புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை!



(காரைதீவு நிருபர் சகா)

மட்டக்களப்பு,மார்ச் 09

அண்மையில் சூறாவளியினால் மிகமோசமாகப் பாதிப்புக்குள்ளான பெரியநீலாவணைத் தொடர்மாடி வீட்டுத்தொகுதியைப் புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு சந்திரகாந்தன் அனர்த்தமுகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவைச் சந்தித்துப் பேசிய தன் பலனாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பெரியநீலாவணை மக்கள் சூறாவளியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி மீளக்குடியமர்த்த வேண்டும் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் கேட்டுக்கொண்டதற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுவருடப்பிறப்பிற்கு முன்னர் பெரியநீலாவணை மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

# பொதுச்சேவை ஆணைக்குழு தலைவராக கிழக்கில் சந்திர ஜெயதிலக்க நியமனம்!

கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக சந்திர ஜெயதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லோகமவால் நேற்று இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் மேல் நீதிமன்றத்தின் நீதிவானும், மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிவானாகவும் கடமையாற்றியுள்ளார்.

கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னைநாள் உறுப்பினர்களின் நியமனங்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து புதிய நியமனங்களை வழங்குவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லோகம நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, தற்போது தலைவர் பதவி மற்றும்



உறுப்பினர் பதவிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன், உறுப்பினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பீ.டபிள்யூ.டி.சி.ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்விக் கண்காட்சி





மட்டக்களப்பு,மார்ச் 09

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் கல்விக்கண்காட்சி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் தரம் ஒன்று முதல் நான்கு வரையிலான ஆரம்பப் பிரிவு மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் கல்விக்கண்காட்சி, அதிபர் ஜே.ஆர்.பீ.விமல்ராஜ் தலைமையில் காட்மண்ட் மண்டபத்தில் இடம் பெற்றது. மாணவர்களின் திறன்களை விருத்தி செய்து சவால்மிக்க இலத்திரனியல் தொழிநுட்ப உலகிற்கு ஊக்குவித்தல் எனும் தொனிப்பொருளில், மாணவர்களின் திறன்கள் சம்பந்தமான ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன் கலந்து சிறப்பித்தார்.

# திருமலை மாவட்ட அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடல்

திருகோணமலை,மார்ச் 09

திருகோணமலை மாவட்டம், பட்டணம் மற்றும் பட்டணமும் சூழலும் உள்ளடங்கலான பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் , எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இதில் சிங்கப்பூர் நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிறுவனமான சூர்பன ஜுரோங் பிரதிநிதிகளும் கலந்து கொண் டுள்ளனர்.

இதன்போது, அந்தப் பிரதேசங்



களில் இடம்பெற வேண்டிய மிக முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாசி பொதி செய்யப்படும் தொழிற்சாலை முற்றுகை

மட்டக்களப்பு,மார்ச் 09

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்தில் மனித பாவனைக்குதவாத 184 கிலோகிராம் மாசி மற்றும் காலாவதியான சுவையூட்டிகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஆரையம்பதி வடக்கு எல்லையிலுள்ள வீடொன்றிலேயே இவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் டெங்குச் சோதனைக்காக குறித்த வீட்டுக்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அங்கு டெங்கு சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இப்போது அவ்வீட்டில் சட் விரோதமாக மாசி பொதி செய்யும் நடவடிக்கை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, இந்த வீட்டிலிருந்த மாசி மற்றும் அதற்குக் கலக்கும் சுவையூட்டி என்பவற்றைப் பரிசோதனை செய்தபோது, காலாவதியான சுவையூட்டிகளை வைத்திருந்தமை தெரியவந்தது.

இதன்போது, 20 கலன் சுவையூட்டிகளைக் கைப்பற்றியதுடன், பொதி செய்வதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 184 கிலோகிராம் அடங்கிய மாசி மூட்டைகளையும் கைப்பற்றினர்.

இந்த மாசி, மனித பாவனைக்கு உகந்ததா என்பதைக் கண்டறிய கொழும்பிலுள்ள உணவுப் பகுப்பாய்வுத்திணைக்களத்துக்கு அனுப்பப்படவுள்ளன எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, அவற்றின் உரிமையாளருக்கு எதிராக காலாவதியான சுவையூட்டி வைத்திருந்தமைக்காக, நீதிமன்றத்தினூடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் அசாதாரண சூழ் நிலையை ஏற்படுத்தி ஒற்றுமையை சீர்குலைத்து குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கு பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கண்டியில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையை அடுத்து நாட்டில் அமைதியை நிலைநாட்டி மீண்டும் வழமையான நிலைமையை ஏற்படுத்தும் முகமாக அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அத்தோடு, ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பாதுகாப்பு கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் அது அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. மக்களுடைய பாதுகாப்பை கருத்திற் கொண்டே இந்தக் கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி மதங்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கு எதிராக சாதாரண சட்டத்தின்படி தண்டனை வழங்கப்படும்.

தண்டனையை விட அதிக தண்டனை விதிக்கப்படும். அதாவது அச்சுறுத்தல் விடுத்தல், நபர்கள் மீது தாக்குதல் நடத்தல், கொலை செய்தல், கற்பழிப்பு மற்றும் சொத்துக்களைச் சேதமாக்கல் போன்ற செயற்பாடுகளின் போது இவ்வாறு கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அது மாத்திரமல்லாமல் இவ்வாறான அசம்பாவிதங்களை ஏற்படுத்தத் தூண்டுவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறிப்பாக, இவ்வாறானவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸாரை போன்று முப்படையினருக்கும் அதிகாரம் உண்டு. கைது செய்யும் அதிகாரம் மாத்திரமே முப்படையினருக்கு உண்டு மாறாகத் தடுத்து வைக்கும் அதிகாரமில்லை.

இவ்வாறு கைது செய்யப்படும் சந்தேக நபர்களை முப்படையினர் உடனடியாக உரிய பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். பொலிஸார் அவர்களை விசாரணை செய்வர்.

மேலதிக விசாரணைகள் தேவைப்படின் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கமைய 14 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை நடத்தலாம். அதன் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் சந்தேக நபர்களைப் பிணையில் எடுக்க வேண்டுமானால் விசேட காரணங்கள் வேண்டும் அல்லாமல் பிணையில் எடுக்க முடியாது. 7 நாள்களுக்கு இந்த நடவடிக்கைகளை வரையறுக்குமாறும் இதன் போது இன மத மொழி வேறுபாடுகளை கடந்து பக்கச் சார்பின்றி சட்டத்தை நடை முறைப்படுத்துமாறும் ஜனாதிபதி முப்படையினருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சமாதானம் என்பவற்றை கருத்திற் கொண்டே இந்த விசேட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது ஒரு தற்காலிக நடவடிக்கையே. அசம்பாவிதங்கள் இடம்பெற்ற பகுதிகளில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

தற்போது அவசரகால சட்டம் அமுலில் இருக்கிறது. சிலவேளைகளில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படக் கூடும் அது நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டே எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கூட்டுப் படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்ர விஜேகுணரத்ன மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் கோத்தாகொட உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

# பதற்ற நிலைமையைக் கட்டுப்படுத்த 24 மணிநேரப் பாதுகாப்புச் சேவை

## தொலைபேசி இலக்கமும் அறிமுகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் கட்டுப்படுத்துவதற்குப் பாதுகாப்பு படை பிரதானிகளின் காரியாலயம் 24 மணிநேர விசேட சேவையை ஆரம்பித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரசு நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ள போதும் இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி நாட்டை சீர்குலைக்கும் செயற்பாடுகளைச் சில தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்.

ஆகையினாலேயே இந்த 24 மணி நேர விசேட சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டில் குழப்ப நிலையைஏற்படுத்தும் நபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதும், அதனால், ஏற்படும் அசம்பாவிதங்களை தடுத்து மக்களை பாதுகாப்பதுமே தமது நோக்கம் எனவும் தெரிவிக்கும் அரச தகவல் திணைக்களம், அது தொடர்பான தகவல்களை 0711261261 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது helpdeskdgi.gov.lk, மின்னஞ்சல் மூலமாகவோ தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மீட்கப்பட்ட மனிதத் தலை கொஸ்மல்லி என்பவருடையது

கொழும்பு, மார்ச் 09

வாழைத்தோட்டம் பிரதேசத்தில் மீட்கப்பட்ட மனித தலை, முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த பண்டிதகே ஷாந்த குமார எனப்படும் கொஸ் மல்லி என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.



வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தையில் நேற்று முன்தினம் மனிதத் தலை ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் வாழைத்தோட்டம் பொலிஸார் மற்றும் கொழும்புக் குற்றவியல் பிரிவு இணைந்து நடத்திய விசாரணையில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலிலேயே இந்தக் கொலை நடைபெற்றுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 16 ஆம் திகதி இந்த பிரதேசத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்துடன் இவர் தொடர்புபட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. அத்துடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இலங்கைக்கு வருகை தந்துள்ள கண்ணி வெடிகளைத் தடை செய்வதற்கான சாசனத்தின் விசேட ஐ.நா. சிறப்புத் தூதுவர் ஜோர்தானைச் சேர்ந்த இளவரசர் மிரெட் ராட் அல் ஹுஸைன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

# முற்று முழுதாகப் பெண்கள் பணியாற்றும் எயார் இந்தியா விமானம் இலங்கை வருகை!

கொழும்பு, மார்ச் 09

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி முற்றுமுழுதாகப் பெண் உத்தியோகத்தர்களைக் கொண்ட எயார் இந்தியா விமானமொன்று நேற்று இலங்கையை வந்தடைந்தது.



இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்தப் பெண்கள் தொடர்பான அரிய சமிக்ஞை நடவடிக்கையானது உலகளாவியரீதியில் பாராட்டைப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் சென்னை நகரிலிருந்து கொழும்புக்கும் பின்னர் கொழும்பிலிருந்து புதுடில்லிக்கும் நேற்று வியாழக்கிழமை பயணத்தை மேற்கொள்ளும்மேற்படிஎயார்இந்தியா விமானத்தை கப்டன் வி.ரூபா மற்றும் கப்டன் நிமிஷா கோல் ஆகியோர்செயற்படுத்தியுள்ளனர். அதேசமயம், இலங்கையிலுள்ள எயார் இந்தியா அலுவலகமானது கொழும்பு பிரிஸ்டல் வீதியிலுள்ள தனது அலுவலக கட்டடத்தில் வேறாக சர்வதேச பெண்கள் தினத்தை அனுஷ்டித்தது. அங்கு பயண மற்றும் உபசரணைத் துறையிலுள்ள முன்னணிப்பெண்களால்நடத்தப்பட்ட விசேட வைபவமொன்று இடம்பெற்றது. அதேசமயம் இலங்கையிலுள்ள எயார் இந்தியா அலுவலகத்தில் முக்கிய பதவிகளை பெண்கள் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு இலங்கைக்கான பிராந்திய முகாமையாளராக அலைஸ் ஜோபோலும் விமான நிலைய முகாமையாளராக மதுமிதா குப்தாவும் இலங்கைக்கான எயார் இந்தியாவின் பயணிகள் விமான சேவையான இன்டஸ்கி ஏவியேனின் பொது முகாமையாளராக தனுஜாலங்கா திலகவும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்துவின் விவாதச் சமர்

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ். இந்துக் கல்லூரியின் விவாதக் கழகம், 'உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடமாகாண மக்கள் வழங்கியிருக்கும் பல கட்சித் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு ஆதாய மானது/இல்லை' என்ற தலைப்பிலான சொல்லாடல் களம் இன்று மாலை 6.31 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி சபா லிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர் விவாதக் கழகத்தினர்.

## தினசரி ராசி பலன்
(09.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அஷ்டமித்திதி பி.இ. 6.01 மணிவரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: கேட்டை பி.இ. 3.27 மணிவரை. பின்னர் மூலம். மரணயோகம் பி.இ. 3.27 மணிவரை. பின்னர் சுப யோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.51 மணிமுதல் 12.21 மணிவரை*
**சுபநேரம்** - *காலை 6.18 மணிமுதல் 7.47 மணிவரை*
**திவசம் செய்ய வேண்டிய திதி** - *மாசி மாத தேய்பிறை அஷ்டமி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு: கேட்டை**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். எண்ணிய காரியம் தோல்வியில் முடியும். உடல்நலக் கோளாறு உண்டாகும். வழக்குகள் தோல்வியடையும். மன உளைச்சலுக்கு ஆளாவார்கள்.

**ரிஷபம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செல வும் சமமாக இருக்கும். வியாபாரத்தில் தேக்கநிலை உண்டாகும். தொழிலில் பிரயாசை அலைச்சல் அதி கரிக்கும்.

**மிதுனம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். உத்தியோகத் தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் அமையும். பிரபலமான மனிதர்களின் நட்பால் அதிக நன்மை அடைவார்கள்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தடைப்பட்ட காரியங்கள் முடியும். வியா பாரத்தில் லாபம் எதிர்பார்த்தபடி இருக்கும். சொத் துத் தகராறு தீரும்.

**சிம்மம்** சஞ்சலமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக் கும். உடல்நலம் பாதிப்படையும். தொழிலில் அதிக அலைச்சல்களால் உடல் சோர்வடையும். கொடுக் கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

**கன்னி** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமா ராக இருக்கும்.செலவினங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் ஓர ளவு முன்னேற்றம் உண்டாகும்.

**துலாம்** அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும் பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வெளி வட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். அரசு வழியால் வீடு, காணி என்பன சிலருக்குக் கிடைக்கும்.

**விருச்சிகம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் அதிரடி லாபம் கிடைக் கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடத்திற்கு மாற்றம் கிடைக்கும்.

**தனுசு** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோகபூர்வமாய் நிறைய அலைய வேண்டியிருக்கும். பணப்பற்றாக் குறையால் கடன் வாங்க சிலர் அலைவார்கள். படித்து முடித்த சிலர் வேலை தேடித் திரிவார்கள்.

**மகரம்** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். திருமண வாய்ப்புகள் வந்துசேரும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். குடும் பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும்.

**கும்பம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். காரியம் முடிப் பதில் தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**மீனம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். தொழிலில் உயர்வு கிடைக்கும். வேலை தேடு வோருக்கு அரசாங்க வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்கு வதைத் தவிர்க்கவும்.**

# கண்டாவளை பிரதேச செயலக கலாசாரப் பெருவிழா இன்று

கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கண்ணகி நகர் அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராகவும் மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன், கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோண் குயின்ரஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதேச பண்பாட்டை ஆவணப்படுத்தும் 'வளை ஓசை - நாதம் 7' நூல் வெளியிடப் படவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.பிரபாகரன் நிகழ்த்த, முதல் பிரதியை வர்த்தகர் யோ.நிசாந்தகுமார் பெறவுள்ளார். நூலின் ஆய்வுரையை மாவட்ட செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

இதனையடுத்து 2017 ஆம் ஆண்டில் பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேலும், 2017 ஆண்டுக்குரிய 'கலை ஒளி' விருதை சமூகப் பணிக்காக உமையாள்புரத்தைச் சேர்ந்த க.தம்பிப்பிள்ளை, சமயப் பணிக்காகத்தட்டுவன்கொட்டியைச் சேர்ந்த சு.கிருஷ்ணபிள்ளை, கல்விப் பணிக்காக தருமபுரத்தைச் சேர்ந்த சா. செல்வநாதன் ஆகியோர் பெறவுள்ளனர். தொடர்ந்து 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் விஞ்சி நிற்பது அரசனின் அதிகாரமா? பெண்மையின் பெருமையா?' எனும் தலைப்பில் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தனின் தலைமையில் பட்டிமண்டபம், கண்ணகிநகர் அண்ணாவியார் இயக்கத்தின் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து என்பனவும் இடம்பெறும்.

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார்.

# விளையாட்டு விழா

கோண்டாவில், மார்ச் 09

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர்களான சுப்பிரமணியம் நகுலேஸ்வரி ஞாபகார்த்த குட்டிச் சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலைய முன்றிலில் து.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி பிரதம விருந்தினராகவும் ஓய்வுநிலை அதிபர் சண். வாமதேவன், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் வி.கு.றெஸ்ரன்றோய், கிராம அலுவலர் திருமதி கு.பிரதாபராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வுள்ளார்.

## இலட்சார்ச்சனை

இணுவில் திருப்பதி திருவெங்கடேஸ்வரர் ஆலய இலட்சார்ச்சனை விழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயத்தில் இலட்சார்ச்சனை விழா பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு இலட்சார்ச்சனை விழா ஆரம்பமாகி இரவு 7.30 மணிக்கு நிறைவடைகின்றது.

# நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டம் நாளை

வலிகாமம், மார்ச் 09

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சமாதான நீதவான் நடராஜா சண்முகவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்குப் பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலகக் கணக்காளர் அரசரத்தினம் மோகனராஜும் கௌரவ விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச செயலக ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி குகதாசன் லிகிர்தா, ஆயுர்வேத வைத்தியர் திருமதி கேமலதா கிருபாகரன் மற்றும் யாழ். மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் க.கதிரமலை ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர்.

மேற்படி நிகழ்வில் விருந்தினர் உரைகள் இடம்பெறும். அத்தோடு, மௌன இறைவணக்கம், அமரத்துவம் அடைந்த ஓய்வூதியர்களுக்கான மௌன அஞ்சலி, 2017 ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை, செயற்பாட்டு அறிக்கை, ஆண்டுநிதி அறிக்கை, 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு மேலும் பிற விடயங்கள் என்பன இடம்பெறுமென பொதுக்கூட்ட நிர்வாகத்தினர் அறியத் தந்துள்ளனர்.

## இன்றும் நாளையும் மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக-

இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை -

**வவுனியா பிரதேசத்தில்** - திரு நாவற்குளம் கிராமத்திலும் -

நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை -

**யாழ். பிரதேசத்தில்**- கரம்பைக் குறிச்சியிலும் (வறணி)-

**கிளிநொச்சி பிரதேசத்தில்**- பூதன்வயல், முறிப்பு, தண்ணிமுறிப்பு, குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடு வாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், குமுழமுனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்** - அரச முறிப்பு கிராமம், பஸார் வீதி, மில் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, பம்பைமடு கிராமம், கற்பக புரம் கிராமம், ராஜ் மீன்பிடி வலைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் -

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



## அவசர காலநிலை பிரகடனம்

# தமிழர்களுக்கு இது புதிய விடயம் அல்ல

இலங்கையில் சில இடங்களில் சிங்கள - முஸ்லிம் வன்செயல்கள் இடம்பெற்றமையை அடுத்து நாடு முழுவதும் அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

7 முதல் 10 நாள்களுக்கு இந்த அவசரகால நிலை அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேல் இந்த அவசரகால நிலை நீடிக்கப்பட வேண்டுமா என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்வார். ஆனால், அப்படி அது நீடிக்கப்படுவதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தேவைப்படலாம்.

பொதுவாக நிலைமை கட்டுக்கடங்காமல் போகும் போது சுமுக நிலையை உருவாக்கவே அவசரகால நிலையை அமுல்படுத்துவது வழக்கம்.

ஆனாலும், இலங்கையில் தொடர்ந்த உள்நாட்டு போர், அதற்கு முந்தைய ஜே.வி.பி. கலவரம் ஆகியவை காரணமாக 1978 முதல் 2009 இல் போர் முடிவுக்கு வரும் வரை அவசர நிலை தொடர்ச்சியாகவே அமுலில் இருந்து வந்துள்ளது.

அவசரகால நிலை அமுலுக்கு வந்தால் ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படும். கூடவே பொலிஸாருக்கும் அதிகாரங்கள் அதிகரிக்கும்.



குறிப்பாக தேவைப்படும் ஒருவரை நீதிமன்ற உத்தரவின்றியே கைது செய்து, குறிப்பிட்ட காலம் வரை அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் பொலிஸார் தடுத்து வைக்க முடியும்.

தேவைப்படும் இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் பொலிஸாருக்கு அதிகாரம் இருக்கும்.

பாதுகாப்பைப் பலப்படுத்த இராணுவத்தினரும் ஏனைய பாதுகாப்புப் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்படலாம். தேவையான இடங்களில் திடீர் சோதனைச் சாவடிகள் கூட அமைக்கப்படலாம்.

**கலவரங்கள்**

பொது இடங்களில் ஆள்கள் கூடுவது மட்டுப்படுத்தப்படும். இது ஆர்ப்பாட்டங்கள் கலவரங்கள் உருவாவதை தடுக்க உதவும். அனுமதியின்றி கூடும் கூட்டமே கடந்த காலங்களில் பிறரை தாக்கி சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

கலவர நேரங்களில் வன்செயலில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவும் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்படலாம்.

தேவையான இடங்களில் ஊடரங்கு சட்டங்களை பிறப்பிக்க முடியும்.

நிலைமையை முடிவு செய்ய தேவையான அதிகாரங்கள் அரசாங்க அதிபருக்கும் மஜிஸ்ட்ரேட்டுக்கும் வழங்கப்படும்.

ஊடகங்கள் மீது கட்டுப்பாடு கொண்டுவரமுடியும். தேவைப்படின் தணிக்கையும் அமுலுக்கு வரலாம்.

குறிப்பாக சமூக ஊடகங்களே வன்செயலை பரப்ப பெரும் காரணமாக கருதப்படுகின்றமையால், அவற்றை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அப்படியான தவறுகளை செய்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக நிலைமையை மிகைப்படுத்திக் காண்பிப்பது, வெறுப்புணர்வுப் பிரசாரம் ஆகியவற்றுக்கு இங்கு சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை அவசரகால நிலை இங்கு பழகிப்போன ஒன்றுதான். கடந்த 30 வருட காலப் போர் அதனை குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களுக்குப் பழகிப்போன ஒன்றாகச் செய்துள்ளது.

போர் முடிவுக்கு வந்ததை அடுத்து அவசரகால நிலை இங்கு நீக்கப்பட்டாலும், இங்கு இன்னமும் பயங்கரவாதச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்து வருகின்றது.

பொதுவாக இங்கு சிறுபான்மையினர் இப்படியான சூழ்நிலையில் அவசர நிலையைப்பார்த்து ஆறுதலடைவதற்கு பதிலாக குழப்பமடைவதே அதிகம் என்று கூறுகிறார்கள். ஒட்டுமொத்தமாக தமது உரிமைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு சட்டமாகவே இதனை அவர்கள் பார்க்கிறார்கள். ★







# செல்பி கிங்!

இங்கிலாந்தைச் சேர்ந்த 22 வயது ஜுனைத் அஹமது, மொடலாக இருக்கிறார். தினமும் 3 மணிநேரம் செலவு செய்து, 200 ஒளிப்படங்களை எடுக்கிறார். அவற்றிலிருந்து மிகச் சிறந்த சில படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிடுகிறார்.

செல்பி கிங் என்று அழைத்துக்கொள்ளும் இவரை, 50 ஆயிரம் பேர் பின்தொடர்கிறார்கள். வாரம் ஒருமுறை பேஷியல் செய்கிறார், புருவங்களைத் திருத்திக் கொள்கிறார்.

தினமும் விதவிதமாக ஒப்பனை செய்துகொள்கிறார். கடந்த ஆண்டு மட்டும் பற்கள், புருவங்கள், உதடு, கண்கள், தலை என்று அழகுக்காகப் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறார்.

சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து நாம் கவனிக்கப்பட வேண்டும் என்றால் ஏதாவது வித்தியாசமாகச் செய்ய வேண்டும். ஒரு படத்தை இன்ஸ்ரகிராமில் போட்ட முதல் நிமிடத்தில் 100 பேர் விருப்பக்குறி இட்டிருப்பார்கள்.

என் ஸ்மார்ட்போனில் விருப்பக் குறியிடுபவர்களின் தகவல் வந்து கொண்டே இருக்கும். ஒரு படம் வெளியிட்டு குறைந்தது 500 விருப்பக்குறிகளாவது இருந்தால்தான் அந்தப் படத்தைத் தொடர்ந்து வைத்திருப்பேன்.

அதைவிடக் குறைவாக இருந்தால் படத்தை நீக்கிவிடுவேன். ஓராண்டுக்கு முன்புவரை நான் இயற்கையாகவே இருந்தேன். ஆனால் சமூகவலைத்தளங்கள் மீது எனக்கு ஏற்பட்ட ஆர்வத்தின் விளைவால் இப்படி என்னை மேம்படுத்திக்கொண்டேன் என்கிறார் அவர்.

# ஆடு, நாயாக முடியுமா?

ஆம்ப்ரியா நாட்டைச் சேர்ந்த அலி வாக்ஹன், ஆதரவின்றி கிடந்த ஓர் ஆட்டுக்குட்டியை வீட்டுக்கு கொண்டு வந்தார். மெர்லி என்று பெயரிட்டு தன் நாய் ஜெஸ்ஸுடன் சேர்த்து வளர்த்து வந்தார்.

நாயைப் பார்த்த ஆட்டுக்குட்டி, தன்னையும் நாயாக நினைத்துக் கொண்டது. ஆட்டுக்கு வைத்த புல், இலைதழைகளைச் சாப்பிடுவதில்லை. நாய்க்கு வைக்கும் பாத்திரத்தில் உள்ள உணவைத்தான் சாப்பிடுகிறது. வீட்டுக்கு வெளியே தங்குவதில்லை. நாய் வசிக்கும் மெத்தையில்தான் உறங்குகிறது. நாயைப் போலவே கழுத்தில் கயிற்றைக் கட்டி வெளியே அழைத்துச் செல்வதை விரும்புகிறது.

மொத்தத்தில் உணவு, பழக்க வழக்கம் அனைத்திலும் நாயாகவே நடந்துகொள்கிறது. இந்த ஆட்டுக்குட்டி நாயைப் பின்பற்றும் என்று நினைக்கவே இல்லை. நாயும் இதைப் போட்டியாக நினைக்காமல் விட்டுக் கொடுத்து விடுகிறது. இரண்டும் ஒன்றாகவே திரிகின்றன. உடல் முழுவதும் கம்பளி இருந்தாலும் நாயைப் போல் படுக்கையில்தான் உறங்குகிறது. ஆட்டின் பழக்கத்தை மாற்ற நினைத்து பல முயற்சிகளை மேற்கொண்டேன். எல்லாமே தோல்வியில் முடிந்தன. அதனால் இப்போது ஓர் ஆட்டை வாங்கியிருக்கிறேன். இந்த ஆட்டுடன் மெர்லியையும் சேர்ந்து வெளியே அனுப்புகிறேன். மெர்லி சுற்றிவிட்டு, வீட்டுக்கு வந்து நாயின் உண வைத்தான் சாப்பிடுகிறது. காலப்போக்கில் இந்தப் பழக்கம் மாறும் என்று காத்திருக்கிறேன் என்கிறார் அலி வாக்ஹன்.



# கண்டி - திகண அசாதாரண நிலைக்கு அரசின் அசமந்தச் செயற்பாடே காரணம்!

## வேலு குமார் எம்.பி. அறிக்கை

கொழும்பு, மார்ச் 09

கண்டி – திகண பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைக்கு அரசின் அசமந்தச் செயற்பாடே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டி–திகண பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள தனது விசேட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இன்றையநல்லாட்சிஅரசை உருவாக்குவதில் தமிழ், முஸ்லிம் மக்கள் முன்னின்று செயற்பட்டு இருக்கின்றார்கள். அதன் மூலம் அவர்கள் எதிர்பார்த்தது சக வாழ்வையும், சமாதானத்தையும் ஆகும்.

இன்று இந்த நிலைமை தலைகீழாக மாறி வருகின்றது. திட்டமிட்ட முறையில் சிறுபான்மை மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு இருக்கின்றன.

இன்று முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து இடம்பெறும் வன்முறைகள் உடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு மற்றும் இன, மத, பேதம் பாராது அமுல்படுத்தப்பட வேண்டும்.

கண்டி–திகணபிரதேசத்திலும்அதனை சூழவுள்ள பகுதிகளிலும் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டு இருக்கின்றன. பல முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மற்றும்அவர்களது பலகோடிபெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டு இருக்கின்றன.

சில இடங்களில் உடைமைகள் சூறையாடப்பட்டு இருக்கின்றன. அதனையும் தாண்டி முஸ்லிம் இளைஞர் ஒருவர் சம்பவத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்டு இருக்கின்றார். இன்னும் சிலர் காயத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

ஆங்காங்கே சில தமிழ் வர்த்தக நிலையங்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதனை வன்மையாக நாம் கண்டிக்கின்றோம். அரசின் அசமந்த செயற்பாடே இந்த நிலைமைக்கு காரணம் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டி இருக்கின்றது.

அன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் இன்று முஸ்லிம் மக்கள் மீது திருப்பப்பட்டுள்ளன. எமக்கு இதன் வருத்தம் என்ன என்று தெரியும். இந்த பாதிப்புகளின் விலை என்ன என்று தெரியும்.

அன்று அரசு தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. அதன் மூலம் எமது நாடு பெரும் பின்னடைவுக்கு உள்ளானது.

இன்று சில மத வாத மற்றும் இன வாத குழுக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு செயற்படுகின்றன. பொலிஸ் அதிகாரிகள் சரியாகச் செயற்படுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

விசேட அதிரடிப்படையினர் கடமையைச் சரிவர செய்தனரா என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில் வன்முறை இடம்பெற்றது பட்டப்பகலில் ஆகும். எனவே அரசு இதனைத் தொடர அனுமதிக்கக் கூடாது.

இத்தகைய வன்முறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் வன்முறையைத் தூண்டுபவர்களுக்கு எதிராக மிக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவங்களை அலட் சியமாக நோக்கினால் அதன் விளைவு இன்னும் ஓர் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பமாக அமைந்துவிடக் கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி





சென் ஜோன்ஸ் அம்புலன்பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற முதலுதவி பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி சென் ஜோன் அம்புலன்ஸ் யாழ் மாவட்ட ஆணையாளர் செ. செல்வரஞ்சன் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இலங்கையில் தமிழ் மொழி மூலமாக முதல் முறையாக முதலுதவிப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சி வட மாகாணத்தில் நடைபெற்றது. சென் ஜோன் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தில் ஆணையாளர் டாக்டர் ஜே.எம். நிலாம் இப் பயிற்சி நெறியை வழங்கினார். இதில்திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இருந்தும் சென் ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்சென்ஜோன்ஸ்அம்புலன்ஸ் உத்தியோகத்தர்கள் 85 இற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றினார்கள். அங்கு உரையாற்றியவடமாகாணகல்விஅமைச்சர் தனது உரையில் யுத்த காலத்தில் சென் ஜோன் அம்புலன்ஸ் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வந்தது என்றும் வருங்காலத்தில் பாடசாலை மத்தியில் சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவுகளை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் மருத்துவச் சேவைக்கு உதவியாகச் செயற்படுவதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற தெரிவித்தார்.

# மன்னார் – கோமரசன்குளம் பாதயாத்திரை நிறுத்தம்

## அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தகவல்

மன்னார், மார்ச் 09

மன்னாரில் இருந்து வவுனியா கோமரசன் குளத்திற்கான பாதயாத்திரை நிறுத்தப்பட்டுள்ளது என மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கண்டிப் பிரதேசத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து இலங்கை அரசினால் தொடர்ச்சியாக 10 நாள்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்திற்கு அமைவாக நேற்றுமுன்தினம் முதல் இன்று வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவிருந்த வவுனியா கோமரசன் குளத்திற்கான பாதயாத்திரை மற்றும் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த பாத யாத்திரை ஆகியன மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் நிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோமரசன் குளம் கல்வாரித் திருத்தலத்தில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் இடம்பெறும்.

வெள்ளிக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு ஓலைத் தொடுவாய் கர்த்தர் திருத்தலத்தில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் இடம்பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 53 சிகிச்சைகளுக்கான கட்டணங்கள் முதற்கட்டமாக ஒழுங்குறுத்தப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



தனியார் வைத்தியசாலைகளில் ஒழுங்குறுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 53 சிகிச்சைகளுக்கான கட்டணங்கள் ஒழுங்குறுத்தப்படவிருக்கின்றன என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனியார் வைத்தியசாலைகளுடன் இணைந்து தனியார் வைத்தியத் துறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் சங்கத்தின் யோசனைகள் கிடைத்தவுடன் எதிர் வரும் இரண்டு வாரத்தில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார்.

# மன்னார் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மக்களுக்கு விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

மன்னார், மார்ச் 09

மன்னார் பிரதேச நீர்ப் பாவனையாளர்கள் தமது நீர்ப்பட்டியலில் ஒரு மாதத்திற்கு மேல் நிலுவைத்தொகை காணப்பட்டால் உடனடியாக முழுத்தொகையினையும் செலுத்தி நீர்த்துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

மன்னார் பிரதேச நீர்ப் பாவனையாளர்கள் ஒரு மாதத்திற்கு மேல் தங்களின் நீர்ப்பட்டியலில் நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் இருந்தால் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முழுத்தொகையையும் செலுத்தாத பாவனையாளர்களுடைய இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், துண்டிக்கப்பட்ட இணைப்புக்களை மீள் இணைப்பு செய்யத் தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 12 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# 2017 –18 பெரும் போகத்தில் அரசால் நெல் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 09

2017- 2018 பெரும் போகத்தில் நுகர்வோருக்கான தேவையிலும் பார்க்க நெல் அறுவடை கிடைத்துள்ள மாவட்டங்களில் அரசு நெல்லை கொள்வனவு செய்வதற்கான வேலைத் திட்டத்தை நெல் சந்தைப் படுத்தும் சபை நடைமுறைப் படுத்தியுள்ளது.

இதற்காக 50 கோடி ரூபா நிதியினை திறைசேரி யிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காகக் கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சர் பி.ஹெரிசன் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## அக்கினிக் குஞ்சு

உவப்பான அச் செய்தியைத் தொலைபேசியில் ஜீவா சொன்னார். 'புதுவை இரத்தினதுரையின் படத்தை அட்டையில் போடப் போகிறேன். நீங்கள் தான் எழுத வேணும்' வேண்டுகோளா, கட்டளையா எனத் தெரியாத ஜீவாவின் அக்கோரிக்கையால் மனம் மகிழ்ந்தது என்னவோ உண்மை. எங்கள் புதுவை தானே என்னும் எண்ணத்தில், சாதாரணமாகச் 'சரி' என்று சொல்லிவிட்டேன். ஆனால், எழுதத் தொடங்கும் போது தான் இக்காரியம் என்னால் சாத்தியமா? என்ற பிரமிப்பு உண்டாகிறது. தலைசிறந்த கவிஞன், புரட்சியாளன், போராளி, கலாரசிகன் எனப் பல பரிமாணங்கள் கொண்ட புதுவையை, ஒரு மூன்று பக்கக் கட்டுரைக்குள் முழுமையாய்க் காட்டுதல் சாத்தியமா? கேள்வி திகைப்பு ஏற்படுத்த, மீண்டும் ஜீவாவுடன் தொடர்பு கொண்டேன். 'ஒன்றும் யோசிக்க வேண்டாம். உங்கள் மனதுக்கு நெருக்கமான புதுவையை எழுதுங்கள் போதும்' மலைபோல் நான் நினைத்த பிரச்சினையை ஜீவா கடுகாய் ஊதித் தள்ளினார். ஆசிரியரே அனுமதி தந்த பிறகு எனக்கு என்ன கவலை? என் எண்ண அலைகளை மையாக்கி எழுதத் தொடங்குகிறேன்.

**ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென**
**ஆசைபற்றி அறைய லுற்றேன்.**
**கம்பனின் அவையடக்கமே**

இக்கட்டுரையின் அவையடக்கமுமாம்.

* * *

ஓரிரு ஆண்டுகளுக்கு முன், இக்கட்டுரையை எழுதும் வாய்ப்புக் கிடைத்திருந்தால், இன்னும் நன்றாய் இருந்திருக்கும். இன்று ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலையில் முழுவீச்சோடு புலிகள் இயக்க அலை வீசும் போது அவ்வியக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத் தலைவரை, பாராட்டி எழுதுவது இச்சகமாய் இனங்காணப்படுமோ? எண்ணம் மனதைச் சங்கடப்படுத்துகிறது. எனினும், தேவைகள் ஏதும் இல்லா என் நிலையை, உலகம் அறிகிறதோ, இல்லையோ? உற்ற நட்பினால் புதுவை அறிவார் எனும் தெம்பில் கூச்சம் தவிர்த்து இக்கட்டுரையை எழுதத் தொடங்குகிறேன்.

* * *

வரலாற்றுப் பதிவில் என் அறிவு மிகப் பலவீனமானது. 1985 இலோ, 86 இலோ நினைவில்லை. யாழ்ப்பாணத்தில் கம்பன் கோட்டம் கட்டும் முயற்சியில், நாங்கள் ஈடுபட்டிருந்த வேளை அது. நம்பிக்கை ஒன்றே பலமாய் நாம் வாழ்ந்த காலம். முதல்தளம் கட்டி 'கொங்கிறீற்' போட்டு முடித்த பிறகு அன்றாடம் காலையில் நாங்களே கூலியாட்களாய் அதற்குத் தண்ணீர் ஊற்றுவோம். எத்தனையோ இலக்கிய வாதிகள், அக்காட்சியைக் கண்டபடி வீதியில் செல்வர். கூலியாள்களாய் வேலை செய்யும் எங்களை, 'விசரர்களாய்' நினைப்பதை அவர்கள் கண்கள் சொல்லும். மண்ணில் மிதிக்காத அவ்விண்ணர்களைப் பற்றி, நாம் கவலைப்பட்டதில்லை.

* * *

காரியமே கண்ணாய், ஒருநாள் அதிகாலை தண்ணீர் ஊற்றும் பணி நடக்கிறது. படி இடப்படாத அத்தளத்திற்கு கம்பிகளைப் பிடித்து மிகக் கஷ்டப்பட்டுத் தான் ஏற வேண்டும்.



மேலே நின்ற நம்மை கம்பிகளைப் பிடித்து யாரோ ஏறும் சத்தம் ஈர்க்க, திரும்பிப் பார்க்கிறோம். வலிமையான ஒரு கரம் இரும்புக் கம்பியைப் பிடித்து தொற்றி ஏறுகிறது. யாரென நாம் நினைப்பதற்குள் புதுவை மேலே ஏறுகிறார். அவரோடு நட்பில்லாத காலம் அது. ஓர் இலக்கிய அமைப்பை உருவாக்க தனித்துப் பாடுபடும் இளைஞர்களான எம் மேல் ஈர்ப்புத் தோன்றியிருக்கும் போலும். கருணைப் பார்வை, ஒரு சில வார்த்தைகள், விடை பெறுகிறார். அடுத்த மல்லிகை இதழில் 'கம்பன் கோட்டத்திற்கு கை கொடுப்போம்' எனும் தலைப்பில் புதுவையின் கட்டுரை வெளியாகிறது. தூர இருந்தாலும் எங்கள் உண்மைத் தொண்டை இனங்கண்டு ஏதோ விதத்தில் கை கொடுக்க வேண்டுமென விரும்பிய புதுவையின் மேல் நம்மையறியாமல் விருப்பு உண்டாகிறது. உறவு முளைவிடத் தொடங்கி நட்பு மெல்ல மெல்ல விரிய புதுவை எனும் பெருங்கவிஞனுள், நாம் கரைந்து போனோம்.

* * *

இது தான் புதுவையின் இயல்பு. தூர இருந்து விமர்சித்தல், வெற்றி பெற்ற பின் உரிமை கொண்டாடுதல், மெலியரெனின் மீக்கூறல், வலியரெனின் வழிமொழிதல் என, நம் இலக்கிய உலகைப் பற்றிக்கிடக்கும் பல நோய்கள், புதுவையிடம் இல்லாதது புதுமை. கொள்கைக் கண்ணாடிகளைத் தூர எறிந்து, எதையும் தன் சொந்தக் கண்ணால் காணும் சுயம், புதுவையின் தனித் தன்மை. பேசவும் எழுதவும் மட்டுமே இலக்கியவாதி எனும், வரையறைகளைத் தவிர்த்து, 'செயற்படவும்' எனும் புது எல்லையையும் வகுத்துக் கொண்டவர்.

* * *

ஈழத்துக் கவிதை உலகில், புதுவைக்கு ஒரு தனி இடம் உண்டு. வடிவம், இலக்கியத் தரம், வற்றாத கற்பனை இவை எல்லாவற்றையும் விட உண்மையைக் கண்டு உளம் கொதிக்கும் தன்மையே, புதுவையின் கவிதைகளின் உயிர்ப்பு. நெஞ்சத்திலிருந்து வார்த்தைகள் பிறப்பதால், மற்றவர் செவி தாண்டி உளம் சேரும் தன்மை அவர் கவிதைகளுக்கு எப்போதும் உண்டு. அவ்வாற்றல் தான், இளைஞர்களைப் புதுவையின் பின் குவியச் செய்தது. கவிதையால் மக்களைத்தொட்டு, மாற்றங்கள் விளைவித்த பெருமை ஈழத்துக் கவிதை உலகில், புதுவை ஒருவர்க்கே உரிய தனிப் பெருமை. மகாகவி கூட இலக்கிய உலகில் தான் பெரிதும் பேசப்பட்டார். சினிமாப் பாடல்களைத் தாண்டி சாதாரண பாமரனாலும் கவிதை சொல்லப்பட்டதென்றால், அது புதுவையின் தனிச் சாதனை.

* * *

புதுவையில் நான் பொறாமைப் பட்ட ஒரு காலமும் உண்டு. இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட உண்மை இளைஞர் பலர் எங்கள் கழகத்தில் இருந்தனர். அவர்களுக்கு என்மேல் எல்லையற்ற விருப்பு. புதுவையிடம் நட்புண்டாகி, கழகத்தார் அவருடன் உறவு கொண்டதும் என்னைச் சூழ்ந்திருந்த அத்தனை இளைஞர்களும், புதுவையின் தாசர்களானது கண்டு, நான் பொறாமைப்பட்டிருக்கிறேன். புதுவையைக் காணவென, அதிகாலையில் எழுந்து பல மைல்களுக்கு அப்பாலிருந்து, காதலியைத் தேடும் காதல் ஆர்வத்துடன் ஓடி வந்த அவ்விளைஞர்கள் செயல், என்னைத் திகைக்கச் செய்திருக்கிறது. சுயம், அறிவுக் கூர்மை, ஆற்றல் என்பவற்றோடு, இறையருளாய்க் கிட்டிய கவித்துவமும் கூடிய அவர் இயல்பு. என்னையும் அவரின் தாசனாக்க, என் பொறாமை மெல்ல மறைந்து போனது. சட்டநாதர் கோயிலடியில் இருந்த, புதுவையின் வீட்டு வாசலில் மாமரத்தின் கீழிருந்து, புதுவை சிற்பம் செதுக்க அவரைச் சூழ இருந்து, பொழுதுபோவது தெரியாமல் நாங்கள் மாலைவரை குதூகலித்த காலம் இப்போதும் மனதில் பசுமையாய்ப் பதிந்திருக்கிறது.

* * *

நக்கல்,நையாண்டி, கிண்டல் ஆகிய வற்றோடு கூடிய கண்டனத்தில் புதுவைக்கு நிகர் புதுவையே. கண்டனத்திற்கு ஆளானவன், நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டியது தான். மாமர நிழல் உரையாடலின் போது ஒரு நாள்.... நவீன நாடகத்துறை சார்ந்த ஓர் அறிஞர் எங்களைக் கிண்டல் செய்த கதை பேசப்பட்டது. வந்ததே கோபம் புதுவைக்கு குந்தியிருந்து வேலை செய்தவர் துள்ளியெழும்பினார். மோட்டார் சைக்கிள் 'ஸ்ராட்' செய்வது போல, இரண்டு தரம் கைகளையும் கால்களையும் அடித்துக் காட்ட, இவர் என்ன செய்கிறார் என்று தெரி

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 118**

யாமல், எங்களுக்கு திகைப்பு! திகைத்த எங்களைப் பார்த்து 'இது தானே அவங்களின்ர நடிப்பு, இதையொரு பெரிய காரியமாய்ச் செய்து கொண்டு எங்களையோ சொல்லுறாங்கள்? முதல் அவங்களைச் சரியாய் நடிக்கப் பழக்கிப் போட்டு எங்களைப் பற்றி கதைக்கச் சொல்லு' புதுவையின் அந்தப் பாவத்தைக் கண்டு நாங்கள் சிரித்த சிரிப்பு இப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

* * *

அதேபோல் சந்தம்பாடும் ஒரு கவிஞர், மக்கள் மன்றுக்கு வர மறுத்த போது கோபம் கொண்ட புதுவை, 'என்ன பெரிய சந்தம்? அருணகிரி நாத ரைப் பிடித்துப் பாடுகிறாங்கள், நானும் தான் பாடுவேன்' என்று சொன்னதோடல்லாமல், 'முத்தைத் தரு' எனும் திருப்புகழ் சந்தத்தில், 'தெத்தித்திரி சொத்திச் சரவண முத்துக்கொரு பெட்டையிருக்குது பெரிசாக' எனச் சடுதியாய்ப் பாடி, சூழயிருந்த நம்மையெல்லாம் விழுந்து விழுந்து சிரிக்க வைக்கிறார். புதுவையின் இக் கண்டனக் கணைக்கு நாங்களும் ஆளாகத் தவறவில்லை. 1995 இல் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பிரபலப்பட்டிருந்த எங்கள் பட்டிமண்டபத்தையும், பட்டிமண்டக் குழுவினரையும் நையாண்டி செய்து நகைச்சுவை நடிகர்கள், கவுண்டமணி, செந்திலோடு ஒப்பிட்டு, புதுவை பாடிய, 'வெட்டிரும்புச்சுப்பர்' எனும் கவிதை, யாழ்ப்பாணம் முழுவதும் பிரசித்தமானது. தமிழகத்தில் 'பிரதிவாதி பயங்கரம்' எனும் பட்டத்தோடு, ஓர் அறிஞர் வாழ்ந்ததாய் சொல்வார்கள். நம் மண்ணில் அப்பட்டம் வாங்க முழுத் தகுதியுடையவர் யார்என்றால்? சந்தேகத்திற்கிடமில்லாமல் துணிந்து புதுவை அண்ணரின் பெயரைச் சொல்லலாம்.

* * *

(தொடரும்...)

ஒரு வாரத்திற்குள் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து

# கம்பஹாவில் முஸ்லிம் கிராமங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு, மார்ச் 09

அம்பாறை மற்றும் கண்டி-திகன ஆகிய பகுதிகளில், கடந்த ஒரு வாரத்திற்குள் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையை அடுத்து, கம்பஹா மாவட்ட எல்லைக்குட்பட்ட முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா தலைமையக பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி முதித்த புஸ்ஸல்லவின் விசேட பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் சுமார் 15 இக்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்கள், சிங்களக் கிராமங்களுக்கு மத்தியில் பரந்தளவில் அமைந்துள்ளன. இந்தக் கிராமங்களிலும் திட்டமிட்டு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதனைக் கருத்திற் கொண்டு முன் கூட்டியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மினுவாங்கொடை, திஹாரிய பிரதேசங்களில் சில குழுக்களினால் தாக்குதல் நடத்தப்படவிருந்த தாகக் கூறப்படும் செய்திகளில் எவ்வித நம்பத்தகுந்த உண்மைகளுமில்லை.

இந்த மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் இதுபோன்ற சம்பவங்கள் இதுவரை பதி வாகவுமில்லை. இந்த மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள், சகல இன மக்களுடனும் அந்நியோன்யமாகவும், பரஸ்பர நல்லெண்ணங்களுடனுமே காலாகாலமாக வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, போலியான பொய்ப் பிரசாரங்களை நம்பி, யாரும் அதற்குத் துணை போகவேண்டாம். வீணாக சந்தேகங்களை எழுப்பி, மனதைக் குழப்பிக் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை என்றும் கம்பஹா மாவட்ட புத்திஜீவிகள் அமைப்பு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதுதவிர, மினுவாங்கொடை நகர் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் இரவிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு இரவும், மினுவாங்கொடை பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கல்லொழுவை முஸ்லிம் கிராமத்துக்கும் இந்த விவகாரத்தின் பின்னணியில், அசம்பாவிதங்கள் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் மினுவாங்கொடை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

(ப)

## இன வன்முறைகள்: உலகளாவிய நீதிக்கான ஊடகவியலாளர் கவலை




கொழும்பு, மார்ச் 09

அம்பாறை மற்றும் திகன பகுதிகளில் இடம்பெற்ற இன வன்முறைகள் தொடர்பில் உலகளாவிய நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர்கள் (Sri Lankan Journalists for Global Justice) அமைப்பு தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கி உலக நாடுகளுக்கு மத்தியில் எம்மை தலைகுனிய வைத்துள்ளது என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

உலகளாவிய நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர் அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நிப்போன் ஹோட்டலில் இடம் பெற்றது.

இதன்போது வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமேல் மாகாண தென்னங்காணிகள் துண்டாடப்படுவதை நிறுத்தப் பணிப்பு



கொழும்பு, மார்ச் 09

வடமேல் மாகாணத்தில் தென்னங்காணிகளை துண்டாடுவதை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் பின்பற்றப்படவேண்டிய உரிய முறைமைகளை தயாரிக்குமாறும் மாகாண சபை, பிரதேச சபை மற்றும் தெங்கு அபிவிருத்தி சபை ஆகியவற்றிற்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் குருணாகல் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற குருணாகல் மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வரையறையின்றி தென்னங்காணிகளை துண்டாடுவது தேங்காய் விலை அதிகரிப்பதற்கும் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் காரணமாகி உள்ளது. இது தொடர்பாக அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள 30 செயலாளர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 432 கிராமங்களில் வாழும் 4 லட்சத்து 43 ஆயிரத்து 349 குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கல்வி, சுகாதாரம், நெடுஞ்சாலைகள், விவசாயம், குடிதண்ணீர் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளின் முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான அநுர பிரியதர்சன யாப்பா, எஸ்.பி.நாவின்ன, காமினி ஜயவிக்கிரம பெரேரா, அகிலவிராஜ் காரியவசம், ரவூப் ஹக்கீம், துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, விஜித் விஜயமுனி சொய்சா, ரவீந்திர சமரவீர, இராஜாங்க அமைச்சர் டீ.பீ.ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர்களான இந்திக பண்டாரநாயக்க, அசோக அபேசிங்க, ஜே.சி.அலவத்துவல, தாரநாத் பஸ்நாயக்க, சாந்த பண்டார, முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க, மாகாண சபை உறுப்பினர்கள், குருணாகல் மாவட்ட செயலாளர் காமினி இலங்கரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்கு!



இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத்தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், இந்திய எல்லையில் மீன்பிடிக்கக் கூடத் தாம் அச்சப்படவேண்டியுள்ளது என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 420 இற்கும் குறைவான படகுகளில் மீன்பிடி அனுமதிச் சீட்டுப் பெற்று சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இவர்கள் தனுஷ் கோடிக்கும் கச்சதீவுக்கும் இடையே மீன்பிடிக்க முயன்றபோது இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான அதி விரைவு ரோந்துப் படகுகள் அங்கு வந்துள்ளன.

அந்த ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர், மதுபோதையில் காணப்பட்டனர் என்றும் சுமார் ஏழு மணி நேரத்திற்கும் மேலாக ராமேஸ்வரம் மீனவர்கள் மீது போத்தல்கள், கற்கள், தடிகள், மற்றும் இரும்புக் கம்பிகளைக்கொண்டு வீசி எறிந்து அச்சுறுத்தியுள்ளனர் என மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால், இந்த மீனவர்கள் நடுக்கடலில் தமது விளக்குகளை அணைத்துவிட்டு காத்திருந்துள்ளனர். மேலும், தமது இருநூறுக்கும் மேற்பட்ட வலைகளை இலங்கைப் படையினர் அறுத்து விரட்டியடித்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.




இதனையடுத்து, பாதிக்கப்பட்ட இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய கடலோர காவல் படைக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து உடனடியாக சம்பவ பகுதிக்குச் சென்ற இந்திய கடற்படையினர், இலங்கை கடற்படையினருடன்பேசி கடலில் வெட்டி வீசப்பட்ட இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின் மீன் பிடி வலைகளை கடலில் இருந்து எடுத்து மீனவர்களிடம் ஒப்படைத்தனர் எனப் பாதிக்கப்பட்டு கரை திரும்பிய மீனவர்கள் வேதனையோடு தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த அத்துமீறலால் படகுகளுக்கு தலா ரூ30 ஆயிரம் முதல் ரூ 60 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என வேதனை தெரிவித்துள்ளனர்.

மத்திய மாநில அரசுகள் மீனவர் பிரச்சினையில் கவனம் செலுத்தி இலங்கை அரசுடன் பேசி தமிழக மீனவர்கள் நடுகடலில் பிரச்சினைகள் இல்லாமல் மீன்பிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் ராமநாதபுரம் மாவட்டத்தில் மின்பிடித்தொழிலே இல்லாமல் மீனவர்கள வறுமையால் அழிந்து போவார்கள் என்றும் மேற்படி மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 17 விடைகள் (பகுதி 02 )

01. 1. சென்றோம். 2. நண்பன் 3. கரடிகள், கழுதைகள், நரி, எருமைகள், காட்டு நாய்கள்
4. பெருங்காடு 5. குளத்துக்குள் 6. பிரிந்து
7. ஊளையிட்டது / கேட்டுக் கொண்டிருந்தது. (7 x 1 = 7 புள்ளிகள்)

02. 1. சொன்ன சொல் தவறுதல் 2. தோற்றப்பொலிவு 3. இறத்தல் / சாதல் (3 புள்ளிகள்)
03. 1. பள்ளம் 2. இளநீர் 3. நாணயம் (3 புள்ளிகள்)
04. 1. கூறை 2. இறங்கி (2 புள்ளிகள்)
05. நூலகம் என்பது பூங்காடு (2 புள்ளிகள்)
06. 1. இன்னல் 2. ஆகாயம் (2 புள்ளிகள்)
07. 1. பிரபும் பாபுவும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தவர்கள்
2. தசரத மன்னன் கோசல நாட்டை ஆண்டு வந்தான். (4 புள்ளிகள்)
08. சுப்பிரமணிய பாரதியார் (1 புள்ளி)
09. 1. இன்று திருவிழா / இன்றைக்கு திருவிழா 2. அதிக ஆட்கள் வருவார்கள் (4 புள்ளிகள்)
10. 1. வைத்தியசாலை 2. கணனி அறை (2 புள்ளிகள்)
11. மாம்பழம் ருசியானது (1 புள்ளி)
12. 1. மலசலகூடம் 2. வெண்கட்டி (2 புள்ளிகள்)
13. இறைவன் உங்களை ஆசிர்வதிப்பார் (1 புள்ளி)
14. பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)
15. 1. முப்பதாயிரத்து நாற்பத்தொன்பது
2. I. VI II. நான்கு
3. I.  (ஏதாவது இரு கட்டங்கள்) II 0.75
4. 6/8
5. 39999, 40001
6. 14m 42cm
7. 1. நான்முகி 2. ஆறு
8. 6 மணித்தியாலயம் 55 நிமிடம்
9. 7kg 800g
10. 9 cm
11. 14 : 30 மணித்தியாலம் / 14 : 30h
12. 54 பழங்கள்
13. 10 தடவை
14. 24cm 8mm
15. 76km (30 புள்ளிகள்)


16.

| | | |
|---|---|---|
| 1. 2 | 11. 3 | 21. 4 |
| 2. 4 | 12. 2 | 22. 2 |
| 3. 1 | 13. 1 | 23. 1 |
| 4. 4 | 14. 2 | 24. 3 |
| 5. 2 | 15. 1 | 25. 2 |
| 6. 1 | 16. 4 | 26. 2 |
| 7. 2 | 17. 2 | 27. 3 |
| 8. 2 | 18. 2 | 28. 2 |
| 9. 2 | 19. 3 | 29. 2 |
| 10. 2 | 20. 2 | 30. 4 |

(30 புள்ளிகள்)





28. 
இவ்வுரு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றின் மூலம் தெரியும் கடிகார முகத்தைக் காட்டுகிறது. அதன்படி இக்கடிகார முகம் காட்டும் உண்மையான நேரம் யாது?
1. 4.00 மணி 2. 7.00 மணி 3. 8.00 மணி

29. எனது வீட்டிற்கு தெற்கே அக்காவின் வீடு உள்ளது. அக்காவின் வீட்டிற்கு கிழக்கே தம்பியின் வீடு உள்ளது. எனவே தம்பியின் வீட்டிற்கு எத்திசையில் எனது வீடு உள்ளது?
1. வடகிழக்கு 2. தென்கிழக்கு 3. வடமேற்கு

30. ஒரு மின் அலங்காரச் சக்கரத்தில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என மூன்று வகையான மின்குமிழ்த் தொடர்கள் ஒழுங்கில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவற்றுள் 18வது மின்குமிழின் நிறம் யாது?
1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்


31. அவ் மின் அலங்காரத் தொடரில் 28 மின்குமிழ்கள் காணப்பட்டன ஆயின் அங்கிருந்த சிவப்பு மின் குமிழ்களின் எண்ணிக்கை?
1. 9 2. 10 3. 12

32. பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.


A B C D E

1. ABCDE
2. DBECA
3. AEDCB

குமரன் பாடசாலையிலிருந்து தனது வீட்டிற்கு சென்ற பாதையைப் பின்வரும் உரு காட்டுகிறது.



33. குமரன் அதிகமான தடவைகள் எந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தான்?
1. கிழக்குத் திசை 2. மேற்குத்திசை 3. வடக்குத்திசை

34. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1. நாம் பல்கலைக்களகம் செல்வோம் 2. நாம் பல்கலைக்கழகம் செல்வோம்
3. நாம் பழ்கலைக்கழகம் செல்வோம்

✧ **பின்வரும் பாடலை நன்கு வாசித்து, 35 ஆம், 36 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

35. இப்பாடல் வரிகள் வலியுறுத்துவது

1. சுத்தம்  2. சோம்பல்  3. உடற்பயிற்சி

36. சூழலை சுத்தமாக வைத்திருப்பதால் கிடைக்கும் நன்மை

1. ஆரோக்கியமாக வேலைகளைச் செய்ய முடியாது.
2. நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழலாம்.
3. நல்ல அறிவு கிடைக்கின்றது.

❖ **பின்வரும் கட்டத்தினை அவதானித்து 37 ஆம், 38 ஆம் வினாவுக்கு விடையளிக்க.**

**4, 5, 2, 2, A, 4, 4.5, 5, E, 5, W, N, 2, W, N, N, 4.5, A, B, A**

37. இலக்கங்களும், எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் இலக்கம் 5 எத்தனை தடவை வந்துள்ளது?




1. 3  2. 5  3. 7

38. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது

1. இலக்கம் 2  2. எழுத்து E  3. இலக்கம் 4

39. சரியான கணிதச் செய்கைத் தெரிவு செய்க.

1. $3 \times 3 - 3 = 9$  2. $4 + 2 + 8 = 14$  3. $8 - 5 \times 0 = 3$

40. 1.  2.  3. 

○ □ △ ▭ தரப்பட்டுள்ள வடிவங்கள் ஒவ்வொன்றும் மூன்று தடவை பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட உருவின் கீழ்க் கோடிடுக.



## கல்விக் கதிர் வெளியீடு

**புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்**  வினாத்தாள் **19**

தரம்-5  பகுதி - II  நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்ட சாதனம் கணினியாகும். இது ஒரு மின்னணுச் சாதனமாகும் இது ஆசிரியராகப் பாடம் சொல்லித் தருகின்றது. கல்வி சம்பந்தமான விடயங்களையும், உலகளாவிய பொதுஅறிவு விடயங்களையும் அறிய உதவுகின்றது. இதற்குப் பேராசை கிடையாது. தனது பணிகளை நிறைவாகச் செய்யும். இது ஏளனமாகச் சிரிக்காது துரிதமாகவும் மெதுவாகவும் கற்க உதவுகிறது.

01) கணினியின் பயன்கள் 2 எழுதுக?

1) ..............................

2) ..............................







02. கணினி எவ்வகைச் சாதனமாகும்?

1) ..............................

03. உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

1) ..............................

04. "அறிவு" இச் சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

1) ..............................

2) ..............................

05. **பின்வரும் சொற்களின் ஒத்தசொல்லை எழுதுக.**

1) பூரணம் : ..............................

2) குரு : ..............................

06. **பிரித்து எழுதுக.**

1) சொல்லித்தருகின்றது : ..............................

2) மின்னணு : ..............................

(10 x 1 = 10 புள்ளி)

07. **பின்வரும் சொற்களில் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) பதட்டம்  2) பதற்றம்  3) பதட்றம்  4) பறட்டம்
5) ஆராயிச்சி  6) ஆராய்ச்சி  7) ஆராச்சி  8) ஆறாட்சி

08. **கீழே தரப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1) நான் எப்பொழுதும் புத்தகங்களை .............................. (வாசித்தேன், வாசிப்பேன்)

2) கிளி பழங்களையும் தானியங்களையும் விரும்பி .............................. (உண்ணும், உண்ணுகின்றது)

(2 x 1 = 2 புள்ளி)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 17 விடைகள் (பகுதி I )

| | | | | |
|---|---|---|---|---|
| 1.2 | 9.1 | 17.3 | 25.3 | 33.2 |
| 2.1 | 10.3 | 18.3 | 26.1 | 34.2 |
| 3.1 | 11.1 | 19.2 | 27.2 | 35.3 |
| 4.2 | 12.3 | 20.3 | 28.2 | 36.2 |
| 5.1 | 13.3 | 21.3 | 29.3 | 37.2 |
| 6.3 | 14.2 | 22.2 | 30.1 | 38.3 |
| 7.2 | 15.2 | 23.1 | 31.2 | 39.2 |
| 8.3 | 16.1 | 24.1 | 32.- | 40.3 |

# கழுத்து எலும்புகளையும் பாதுகாக்கும் தலைக்கவசம்



ஆய்வில் தகவல்

தலைக்கவசம் அணிவது தலையை மட்டுமல்லாமல் கழுத்து எலும்புகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் என சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் அணிவது மிகவும் அவசியம். அதே நேரத்தில் விபத்தின் போது கழுத்து எலும்பு முறிவதற்கு ஹெல்மெட்டும் ஒரு காரணம் என்ற கருத்தும் உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக நிபுணர்கள் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 2010 முதல் 2015 ஆம் ஆண்டுவரை இருசக்கர வாகன விபத்துகளில் சிக்கி, சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட ஆயிரத்து 61பேரின் மருத்துவக் குறிப்புகளை ஆய்வு செய்தனர்.

அவர்களில் 323 பேர் விபத்தின் போது தலைக்கவசம் அணிந்து இருந்தனர். 738 பேர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் தலைக்கவசம் அணிந்திருந்த 7.4 வீதமானோருக்குக் கழுத்து எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதே நேரத்தில் ஹெல்மெட் அணியாதவர்களில் 15.4 வீதமாறில் அதிகம் பேருக்குக் கழுத்து எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.

இதன்மூலம் ஹெல்மெட் அணிவது விபத்துக் காலங்களில் தலைக்கு மட்டுமின்றி கழுத்து எலும்புகளுக்கும் பாதுகாப்பானது எனத் தெரியவந்துள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இருந்தாலும், இருசக்கரவாகனங்களில் செல்வோர் தலைக்கவசம் அணிய வேண்டியது அவசியம் என்பதை இந்த ஆய்வு உணர்த்துகிறது.

### அரபு மாநாட்டில் பங்கேற்பதற்கு

## கட்டார் நாட்டுக்கு தடை கிடையாது

கெய்ரோ,மார்ச் 09

ரியாத் நகரில் நடைபெறவுள்ள அரபு மாநாட்டில் கட்டார் நாட்டுக்குத் தடை விதிக்கப்படாது எனச் சவுதி அரேபியாவின் இளவரசர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் இந்த வாரம் எகிப்து நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர் உள்ளூர்ச் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் –



சவுதி அரேபிய இளவரசர் தகவல்

ஈரான், துருக்கி மற்றும் தீவிரவாத குழுக்கள் ஆகியவை நவீன தீய முக்கோணம். ஈரான் மற்றும் மறுபுறம் ரஷ்யா மற்றும் சிரியா என இவர்களுக்கு இடையேயான நெருங்கிய உறவு முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்

ரியாத் நகரில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள அரபு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கட்டார் நாட்டுக்குத் தடை விதிக்கப்படாது. ஆனால், அந்நாட்டுடனான உறவு முறிவு நீண்ட நாள்களுக்குத் தொடரும் என்றும் கூறியுள்ளார்.

## நிதி உதவியை நிறுத்திய பிறகும் நடவடிக்கையில் மாற்றமில்லை



பாக். மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன்,மார்ச் 09

பாகிஸ்தானுக்கான நிதி உதவியை நிறுத்திய நிலையிலும், பயங்கரவாத ஒழிப்பில் அந்த நாட்டின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்காவின் கூட்டாளியாக பாகிஸ்தான் உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தனக்கு பக்கபலமாக உள்ள நாடுகளுக்கு அமெரிக்கா இராணுவ நிதி உதவி அளித்து வருகிறது. அந்த வகையில் பாகிஸ்தானும், அமெரிக்காவிடம் இருந்து நிதி உதவி பெற்று வந்தது.

ஆனால், அந்த நாடு பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்தவோர் உறுதியான நடவடிக்கையும் எடுக்காமல், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருவதுடன், பயங்கரவாதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டி, சொர்க்கபுரியாகத் திகழ்ந்து வருகிறது என அமெரிக்கா கருதுகிறது.

இதனால் அந்த நாட்டுக்கு வழங்கவிருந்த 2 பில்லியன் டொலர் நிதி உதவியை அமெரிக்கா அதிரடியாக நிறுத்தியது.

இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவு துறையின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான முதன்மை துணை செயலாளர் ஆலிஸ் கூறியவை வருமாறு:–

ஆப்கானிஸ்தான் அமைதி நடவடிக்கையில் பாகிஸ்தான் முக்கிய பங்களிப்பு செய்ய வேண்டும். ஆனால் பாகிஸ்தானுக்கான நிதி உதவியை நிறுத்திய நிலையிலும், பயங்கரவாத ஒழிப்பில் அந்த நாட்டின் நிலைப்பாட்டில் உறுதியான, நிலையான மாற்றம் இல்லை. அவர்கள் தலிபான்கள் ஆதிக்கம் உள்ள இடங்களில் முக்கிய பங்களிப்பு செய்ய முடியும் என்பதால் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

## ஹபீஸ் சயீதை கைது செய்யக் கூடாது பாக். அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு

மும்பை தொடர் குண்டு வெடிப்புக்கு காரணமான பயங்கரவாதி ஹபீஸ் சயீதை கைது செய்யக் கூடாது எனப் பாகிஸ்தான் அரசுக்கு லாகூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் இயங்கி வரும் லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை நகரில் 12 இடங்களில் வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தினர். இந்த தொடர்குண்டு வெடிப்பு தாக்குதல்களில் 166 பேர் உயிரிழந்தனர்.



இந்த நிலையில் அமெரிக்க அரசால் கடந்த 2014ஆம் ஆண்டு சர்வதேச பயங்கரவாதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஹபீஸ் சயீதின் தலைக்கு ஒரு கோடி டொலர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஹபீஸ் சயீதுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாகிஸ்தான் பிரதமர் ஷாஹித் காகான் அப்பாசி கடந்த ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்தியா மற்றும் அமெரிக்க அரசின் நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டுப் பொலிஸார் ஹபீஸ் சயீதை எக்காரணத்தைக் கொண்டும் கைது செய்யவோ, வீட்டுக் காவலில் வைக்கவோ கூடாது என்று லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### சிரியாவில் தொடரும் போர்;

## 2 வாரத்தில் 800 பேர் பலி

சிரியா போரில் கடந்த 2 வாரத்தில் மட்டும் 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் 7 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. தலைநகர் டமாஸ்கஸ் அருகே உள்ள கிழக்கு கவுட்டா நகரம் புரட்சிப் படையினரிடம் உள்ளது. அதை மீட்பதற்காக சிரிய இராணுவம் அந்த நகரை முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இடைவிடாமல் குண்டு வீச்சும், பீரங்கித் தாக்குதலும் நடத்தப்படுகிறது. இதில் சிக்கி ஏராளமான குழந்தைகள் உயிர் இழந்தனர்.

இது உலக நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்தது. ஆனாலும், தொடர்ந்து அங்கு தாக்குதல் இடம்பெற்று வருகிறது. கடந்த 2 வாரங்களில் மட்டும் 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

## ரகசியத்தை வெளிப்படுத்தாமல் இருக்க ட்ரம்ப் போட்ட ஒப்பந்தம் செல்லாது

வொஷிங்டன்,மார்ச் 09

அமெரிக்காவில் ஆபாச நடிகை ஒருவர் ரகசியத்தை வெளிப்படுத்தாமல் இருக்க ட்ரம்ப் தன்னுடன் போட்ட ஒப்பந்தம் செல்லாது என நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த ஆபாச நடிகை ஸ்டப்பானி கிளிபோர்ட். இவர் ஸ்ட்ராமி டேனியல்ஸ் என்ற புனைப்பெயரால் அழைக்கப்படுகிறார். இந்த நிலையில், அவர் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண நீதிமன்றில் அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் மீது ஒரு வழக்குத் தொடுத்துள்ளார்.



ஆபாச நடிகை வழக்குத் தாக்கல்

அதில் ட்ரம்ப் 2006 முதல் 2007ஆம் ஆண்டு வரையில் தன்னுடன் தொடர்பில் இருந்தார் எனவும், அப்போது அவருடன் பல இடங்களுக்குத் தான் சென்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்ட பின்னர் தங்களிடையேயான உறவை வெளியில் தெரியாமல் பார்த்துக் கொள்வதற்காக அவர் முயற்சித்தார், அதற்காக தனக்கு சுமார் 85 லட்ச ரூபாய் பணம் கொடுத்தார் எனவும், அப்போது ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

இந்த நிலையில், தற்போது அவர் தொடுத்துள்ள வழக்கில் அப்போது போடப்பட்ட ஒப்பந்தத்தில் ஸ்டப்பானி சார்பில் அவரும், ட்ரம்ப் சார்பில் அவரது வழக்கறிஞரும் மட்டுமே கையெழுத்து போட்டுள்ளனர்.

முறைப்படி இருவருக்கு இடையேயான ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே கையெழுத்திட வேண்டும். ஆனால், அந்த ஒப்பந்தத்தில் ட்ரம்ப் கையெழுத்துப் போடாமையால் அது செல்லாது என அறிவிக்கக் கோரி ஸ்டப்பானி தொடுத்துள்ள வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்தியா அகதிகளின் தலைநகரா?

## ரோஹிங்கியா வழக்கில் மத்திய அரசு வாதம்





புதுடில்லி,மார்ச் 09

ரோஹிங்கியா அகதிகளை திரும்ப அனுப்பக்கூடாது என தொடரப்பட்ட வழக்கில் இந்தியா அகதிகளின் தலைநகரா? என மத்திய அரசு வாதத்தை முன் வைத்துள்ளது.

இந்தியாவில் அதிகாரபூர்வமாக மற்றும் சட்டவிரோதமாக 40 ஆயிரம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் தங்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இவர்களில் பலர் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பில் உள்ளனர் எனவும், இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என தெரிவித்த மத்திய அரசு, சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களை வெளியேற்ற தனிக்குழுவை அமைத்தது.

உரிய அனுமதியின்றி தங்கள் மாநிலத்தில் தங்கியுள்ளவர்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்ற தனிக்குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜூலை மாதம் அறிவுறுத்தி இருந்தது.

மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து ஐக்கிய நாடுகள் அகதிகள் முகமையில் பதிவுசெய்து இந்தியாவில் தங்கியுள்ள ரோஹிங்கியா அகதிகள் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். சர்வதேச அகதிகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறிய வகையில், அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள தங்களை மீண்டும் மியன்மாருக்குத் திருப்பி அனுப்பக் கூடாது என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதில் மனு தாக்கல் செய்திருந்த மத்திய அரசு, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் விருப்பம்போல் தங்கி வாழ, இந்நாட்டில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் உரிமை உள்ளது. இந்தியா அகதிகளின் தலைநகர் அல்ல, உரிய அனுமதி இல்லாமல் அகதிகளாக வந்தவர்கள் இதற்கான உரிமையைக் கோர முடியாது. மேலும், உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அனுமதியின்றி இங்கு தங்கியுள்ள ரோஹிங்கியா அகதிகளை வெளியேற்ற அரசு தீர்மானித்துள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆர்.கே.நகர் தேர்தல்:

# தினகரன் வெற்றியை எதிர்த்து வழக்கு

சென்னை,மார்ச் 09

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் சுயேச்சையாகக் குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட தினகரனின் வெற்றியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி நடந்தது. இதில் சுயேச்சையாகக் குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட டி.டி.வி.தினகரன் 89 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.




இந்த வெற்றியை எதிர்த்துத் தேசிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்தவரும், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிட்டவருமான எம்.எல்.ரவி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், டி.டி.வி.தினகரன் இடைத்தேர்தலில் முறைகேடுகள் செய்து அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்று உள்ளார். ஆர்.கே.நகர் தொகுதிக்கு 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு பெறும் அளவில் முறைகேடு காரணமாகத் தேர்தல் ரத்து செய்யப்பட்டது.

பண விநியோகம் மற்றும் முறைகேடு தொடர்பாக டி.டி.வி.தினகரன் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால் இதுவரை அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் டி.டி.வி.தினகரன் மீண்டும் போட்டியிட அனுமதிக்கப்பட்டு வெற்றி பெற்றுள்ளார். எனவே அவரது வெற்றியை செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகொரியாவுடனான வர்த்தகத்தில் கட்டுப்பாடுகளை இறுக்கிய இந்தியா





புதுடில்லி, மார்ச் 09

வடகொரியா உடன் தற்போது பெரிய அளவில் வர்த்தக உறவு இல்லாத நிலையில், மேலும் பல கட்டுப்பாடுகளை தற்போது இந்தியா விதித்துள்ளது.

ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத பரிசோதனைகள் மேற்கொண்டமையின் விளைவாக வடகொரியா மீது ஐ.நா. பல்வேறு தடைகளை விதித்தது. வடகொரியா உடன் நெருக்கமான வர்த்தக உறவு கொண்டிருந்த சீனாவும் ரஷ்யாவும் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக பல்வேறு அத்தியாவசியப் பொருள்களை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய மறுத்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை வடகொரியா உடன் வர்த்தக உறவு பெரியதாக இல்லை. வெறும் தூதரக உறவு மட்டுமே உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை உணவுப்பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்தது என்றாலும், தற்போது அதுவும் இல்லை. இந்த நிலையில், வடகொரியா உடனான வர்த்தக உறவில் இந்தியா பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

புதிய மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட படகுகள், உணவு மற்றும் தோட்ட உற்பத்தி பொருள்கள், மின் சாதனங்கள், மரச்சாமான்கள், தொழிற்சாலை எந்திரங்கள், போக்குவரத்து வாகனங்கள் ஆகியவை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

# தமிழை சனியன் என்றாராம் பெரியார்

## எச்.ராஜா கருத்தால் சர்ச்சை



சென்னை,மார்ச் 09

தமிழ் என்ற சனியனே இருக்கக்கூடாது என்று ஈ.வே.ரா பெரியார் பேசியதற்கான ஆதாரங்கள் உள்ளன என எச்.ராஜா கூறியமை புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

திரிபுரா மாநிலத்தில் லெனின் சிலை அகற்றப்பட்டது தொடர்பாக, பா.ஜ.க. தேசிய செயலாளர் எச்.ராஜா பேஸ்புக்கில் சர்ச்சைக்குரிய வகையில் கருத்தைப் பதிவு செய்திருந்தார். அதில், இன்று திரிபுராவில் லெனின் சிலை, நாளை தமிழகத்தில் சாதிவெறியர் ஈவேரா ராமசாமி சிலை எனக் கூறியிருந்தார். அவரது கருத்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தச் சர்ச்சை அடங்குவதற்குள் மீண்டும், தமிழ் என்ற சனியனே இருக்கக்கூடாது என்று ஈ.வே.ரா பெரியார் பேசியதற்கான ஆதாரங்கள் உள்ளன எனவும், இந்த உண்மைகளை மக்களிடம் எடுத்துச்சொல்வதால் தான் வசை பாடுகிறார்கள் என்றும் எச்.ராஜா தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


# மனித இரத்த அபிஷேகம் செய்யக் கேரளாவில் தடை

திருவனந்தபுரம்,மார்ச் 09

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள கோவிலில் மனித இரத்தத்தால் காளி சிலைக்கு அபிஷேகம் செய்யும் சடங்கிற்கு அறநிலையத்துறை தடை விதித்துள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள விதுரா என்ற பகுதியில் தேவியோடு ஸ்ரீவிதாவரி வைத்யனாதா கோவில் உள்ளது. இந்த கோவிலில் உள்ள காளி சிலைக்கு மனித இரத்தத்தால் அபிஷேகம் நடத்த மக்கள் இரத்த தானம் செய்ய வேண்டும் என கோவில் நிர்வாகம் அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில், இந்த சடங்கை தடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாநில அறநிலையத்துறை அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் ஆட்டுக்கால் பகவதி அம்மன் கோவிலில் குதியோத்தம் என்ற பெயரில் சிறுவர்களின் முதுகில் கம்பியால் குத்தும் சடங்கிற்கும் கடகம்பள்ளி சுரேந்திரன் எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அரசியல் வெற்றிடத்தை ரஜனி நிரப்ப முடியாது

## நடிகை கௌதமி தெரிவிப்பு



சென்னை,மார்ச் 09

ஜெயலலிதா மறைவால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை ரஜனி, கமல் நிரப்புவது நடைமுறையில் சாத்தியம் இல்லை என நடிகை கௌதமி தெரிவித்தார்.

நேற்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, நடிகை கௌதமி நேற்றுக் காலை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். அதில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் தமிழக அரசியலில் வெற்றிடம் உள்ளது உண்மைதான். கமல் மற்றும் ரஜனி திடீரென அரசியலுக்கு வந்து தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடைமுறையில் சாத்தியம் இல்லை. இந்த வெற்றிடத்தை ஒரே நாளில் யாராலும் நிரப்ப முடியாது என்று தெரிவித்துள்ளார்.




# எமது எதிர்கால திட்டத்தில் மலிங்கவுக்கு இடமுண்டு

## - ஹத்துருசிங்க தெரிவிப்பு

இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளரான லசித் மலிங்க தற்காலிகமாகத் தேசிய அணியிலிருந்து நீக்கப்பட்டாலும், எதிர்காலத்தில் மீண்டும் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார் என இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துருசிங்க தெரிவித்தார்.

அதேநேரம், 2019 உலகக் கிண்ணப் போட்டிகள் வரையான இலங்கை அணியின் எதிர்காலத் திட்டங்களில் மலிங்க ஒரு பகுதியாக இருப்பார் என ஹத்துருசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றும் சுதந்திரக் கிண்ண முத்தரப்பு ரி-20 தொடர் நடைபெற்றுவருகின்றது

இந்த நிலையில், கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சந்திக்க ஹத்துருசிங்க கலந்துகொண்டார்.

இதில், அண்மைக்காலமாக இலங்கை அணியில் வாய்ப்புக் கிடைக்காமல் புறக்கணிக்கப்பட்டுவரும் லசித் மலிங்கவை ஏன் சுதந்திரக் கிண்ண ரி-20 தொடரில் இணைத்துக் கொள்ளவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு சந்திக்க ஹத்துருசிங்க கருத்து வெளியிடுகையில்-

மலிங்க இலங்கைக்கு மாத்திரமல்ல, முழு உலகிற்கும் கிரிக்கெட் விளையாட்டின் அடையாளச் சின்னமாக விளங்குகிறார். அவர் ஓர் அற்புதமான வீரர் மாத்திரமல்லாது அவர் உலகின் பிரபல கூடைப்பந்து நட்சத்திரமான மைக்கல் ஜோர்டனைப் போன்று இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுக்கு மிகப் பெரிய சேவையாற்றியவர்.

உண்மையில் தற்போது நடைபெற்றுவருகின்ற உள்ளூர் ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்ற மலிங்க, திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார். மலிங்க தொடர்பில் தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை இந்த இடத்தில் கூறுவது பொருத்தமில்லை. எனினும், நிச்சயம் மலிங்கவுக்கு எதிர்வரும் காலங்களில் இலங்கை அணியில் வாய்ப்பு கிடைக்கும் என்பதை மாத்திரம் என்னால் தற்போது கூறமுடியும்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான 34 வயதாகும் லசித் மலிங்க ஒரு காலத்தில் உலகக் கிரிக்கெட்டையே தனது பந்துவீச்சால் கட்டிப் போட்டவர் என்றால் மிகையாகாது. எனினும் தொடர் உபாதைகள், போதியளவு திறமைகளை வெளிப்படுத்தாமை, அரசியல் தலையீடுகள் உள்ளிட்ட காரணங்களால் அண்மைக்காலமாக அவர் இலங்கை அணியிலிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், கடந்த வருடம் இந்திய அணிக்கெதிராக இடம்பெற்ற ரி-20 போட்டிக்குப் பிறகு எந்தவொரு கிரிக்கெட் தொடர்களிலும் இலங்கை அணிக்காக விளையாடும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாமல் போன மலிங்கவுக்கு, தற்போது நடைபெற்று வருகின்ற சுதந்திர கிண்ண முத்தரப்பு ரி-20 தொடருக்கான இலங்கை அணியில் வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இறுதியில் அதுவும் ஏமாற்றத்தையே கொடுத்தது. எனினும், கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்றுவருகின்ற உள்ளூர் கழகங்களுக்கிடையிலான ரி-20 போட்டியில் மலிங்க மீண்டும் தனது வழமையான திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் வீரருக்கு 2 போட்டிகளில் தடை



ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றின் நேற்று முன்தின ஆட்டத்தில் துடுப்பாட்ட மட்டையைத் தூக்கி ஆடுகளத்தில் எறிந்த ஆப்கானிஸ்தான் விக்கெட் காப்பாளருக்கு 2 போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. உலக கிண்ணத் தகுதிச் சுற்று ஆட்டம் ஸிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. ஸிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் விக்கெட் காப்பாளர் முகமது ஷசாத் கோபத்தில் துடுப்பாட்ட மட்டையைத் தூக்கி ஆடுகளத்தில் எறிந்தார். இதையொட்டி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 2 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஊக்க மருந்து பயன்படுத்தியமையால் ஒரு ஆண்டு தடை பெற்ற அவர் 3 மாதங்களுக்கு முன்பு களத்துக்கு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊதிய ஒப்பந்தப் பட்டியல் ஷமி பெயர் நிறுத்திவைப்பு



இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி மீது அவரது மனைவி குற்றச்சாட்டுக் கூறியுள்ளமையை அடுத்து இந்திய கிரிக்கெட் சபை வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்த பட்டியலில் அவரைச் சேர்க்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி மீது அவரது மனைவி ஹசின் ஜஹன் பரபரப்பான குற்றச்சாட்டைக் கூறியுள்ளார். ஷமி தன்னை அடித்து துன்புறுத்துகின்றார் எனவும் அவர் பல பெண்களுடன் சகவாசம் வைத்துள்ளார் எனவும் சொல்லி இருக்கிறார். இதை கவனத்தில் எடுத்துக் கொண்ட இந்திய கிரிக்கெட் சபை வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்த பட்டியலில் அவரை சேர்க்காமல் நிறுத்தி வைத்துள்ளது. விசாரணைக்கு பிறகே அவரை ஒப்பந்தத்தில் சேர்ப்பது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கண்டி இன வன்முறைகளுக்கு

# முன்னாள் கப்டன்கள் கண்டனம்



கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக இலங்கை அணியின் முன்னாள் கப்டன்களான குமார் சங்ககாரா, ஜெயவர்தன தங்களது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கலவரம் தொடர்பாக இலங்கை அணியின் முன்னாள் கப்டன்களான குமார் சங்ககாரா, மகிளா ஜெயவர்தன ஆகியோர் தங்களது கண்டனத்தை சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக ஜெயவர்தன கூறுகையில்-

இலங்கையில் நடந்த கலவரத்தை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இதில், சம்மந்தப்பட்ட அனைவரையும் நீதியின் முன்னால் கொண்டு வர வேண்டும். மீண்டும் ஓர் உள்நாட்டு போரில் அடுத்த தலைமுறையினர் வளருவதை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல், குமார் சங்ககாரா கூறியிருப்பவை வருமாறு:-

நாம் அனைவரும் ஒரே நாடு மற்றும் ஒரே மக்கள் என்ற கொள்கையை சேர்ந்தவர்கள். அன்பு, நம்பிக்கை ஆகியவற்றை ஏற்பதே நமது பொதுவான மந்திரமாக இருக்க வேண்டும். வன்முறை மற்றும் இனவெறி தாக்குதலுக்கு இங்கு இடமில்லை. வன்முறைக்கு எதிராக நாம் அனைவரும் ஒற்றுமையாக நிற்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

# எனக்கு எதிராக மிகப்பெரிய சதி நடக்கிறது

## மனைவியின் குற்றச்சாட்டுக்கு ஷமி மறுப்பு

பல பெண்களுடன் தொடர்பு உள்ளது என மனைவி ஹசின் ஜகான் கூறியுள்ள குற்றச்சாட்டு பொய்யானது எனக் கிரிக்கெட் வீரர் முகமது ஷமி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி . இவருக்கு ஹசின் ஜகான் என்ற மனைவியும், மகளும் உள்ளனர். அவ்வப்போது தனது மனைவியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை ஷமி பேஸ்புக்கில் போடுவார். முன்பு ஒருமுறை இவ்வாறு மனைவி படத்தை வெளியிட்டபோது, அவர் உடலை முழுக்க மூடும் வகையில் பர்தா அணியவில்லை என்ற விமர்சனங்களை, முஸ்லிம் நெட்டிசன்கள் முன்வைத்தனர். இது சமூக வலைத்தளங்களில் சர்ச்சையும் ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் மனைவிக்கு ஆதரவாகத்தான் ஷமி கருத்துக் கூறினார். எனவே இருவரும் அன்னியோன்னியமாக இருப்பதாகவே கிரிக்கெட் ரசிகர்கள் நினைத்திருந்தனர். ஆனால் நேற்று ஹசின் ஜகான் தனது பேஸ்புக்கில் சில ஸ்க்ரீன் ஷொட் புகைப்படங்கள் பதிவு செய்திருந்தார். இது ரசிகர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இதையடுத்து ஹசின் ஜகான் அளித்த பேட்டியில், சில நாள்களில் அதிகாலை 2 மணி வரை கூடச் சண்டை சச்சரவுகள் நீடித்துள்ளன எனவும், முகமது ஷமி குடும்பத்தார், தன்னைக் கொலை செய்ய கூட முயன்றனர் எனவும் ஹசின் ஜகான் குற்றஞ்சாட்டியுள்ளார். தனது மகளுக்காகப் பொறுமை காத்து வந்தேன் எனவும், ஆனால் ஷமியின் ஆபாச உரையாடல்களை பார்த்த பிறகு பொறுமை காக்க முடியாமல் இந்த முடிவுக்கு வந்துள்ளேன், இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என ஹசின் ஜகான் தெரிவித்துள்ளார்.

## கிடுக்கிப்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் 9 பேரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் என்று தெரியவருகின்றது.

அத்துடன்,கண்டி இன வன்முறைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மேலும் 71 பேரிடம் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கண்டியில் கடந்த சில தினங்களாக முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகளின் மிக முக்கிய சூத்திரதாரி என அடையாளம் காணப்பட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள அமித் ஜீவன் வீரசிங்க, 'மகசன் பலகாய' என்ற இனவாத பௌத்த அமைப்பின் தலைவராவார். அவர் பொதுபல சேனவின் தலைவர் வண. ஞானசார தேரரின் நெருங்கிய நபர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்த இனவாத அமைப்பு தீவிரமாக ஆதரவளித்து வருகின்றது.

இன வன்முறைகளை வெளியில் இருந்து வந்த குண்டர்களே தூண்டி விட்டனர் என அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தது. ஆயினும் அவர்கள் யார் என்ற தகவலை அரசு அப்போது வெளியிடவில்லை.

இந்த வன்முறைகளுக்குப் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உள்ளார் என அரச புலனாய்வு அமைப்புக்களும் அறிக்கைகளை வழங்கியிருந்தன.

அத்துடன், மகசன் பலகாய அமைப்பே அம்பாறையிலும் கண்டியிலும் இடம்பெற்ற இன வன்முறைகளுக்குக் காரணம் என முஸ்லிம் அமைச்சர்களும் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்த நிலையிலேயே மகசன் பலகாயவின் தலைவர் உட்பட 9 பேரைப் பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் அரசினால் எடுக்கப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சட்டம் ஒழுங்கு அமைச்சராக ரஞ்சித் மத்தும பண்டார நேற்றுக் காலை பதவியேற்றவுடன், இன வன்முறைகளின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொழும்பு அரசியலில் பரபரப்பாகப் பேசப்பட்டது. (ஐ)

## வன்முறைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வருகிறார் எனக் குறிப்பிட்ட சபாநாயகர், அது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் சபையில் வெளிப்படுத்தப்படுமெனவும் உறுதியளித்தார்.

இதேவேளை, நாட்டில் அமைதியைப் பேணுவதற்கு அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றதென்றும் சபாநாயகர் குறிப்பிட்டார். (ஐ)

## சர்வதேசச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆணையாளரினால் ஜெனீவாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் இன மற்றும் மதச் சிறுபான்மையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வன்முறைகளை அடுத்து, நாடளாவிய ரீதியில் அவசரகாலச சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் எச்சரிக்கை அடைந்துள்ளேன்.

இலங்கை அரசு நிலைமாறுகால நீதி நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தவேண்டும். அர்த்தமுள்ள முன்னேற்றங்கள் இல்லாமையையிட்டு நான் கவலையடைகிறேன்.

பொறுப்புக்கூறல் மற்றும் நிலைமாறு கால நீதியின் முன்னேற்றங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகவும் அவசியமானவை.

இதில் முன்னேற்றங்கள் இல்லாத நிலையில், உலகளாவிய சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளை ஊக்குவிக்கவுள்ளேன்.

இது தொடர்பாக எதிர்வரும் 21ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முழுமையான விளக்கம் அளிக்கவுள்ளேன். - என்றுள்ளது. (ஐ)

## ஜெனீவாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில்அரசுக்குஎச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மதுவரி திருத்தச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பௌத்த பிக்குகளே உள்ளனர்.

போரினால் பலவற்றை இழந்த தமிழினத்திற்கு அதன் வலி தெரியும். அந்த வகையில் இனத்தால் வேறுபட்டிருந்தாலும், மொழியால் ஒன்றுபட்ட தமிழர்களும் முஸ்லிம்களும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றுபட்டே நிற்பார்கள்.

சிறுபான்மை இனத்தவர்களுக்குஎதிரானவன்முறையை முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் பிரச்சினைகள் வலுப்பெறும். இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியும் பிரதமரும் பிரிந்து நிற்பதானது நல்லாட்சியின் ஆயுளைச் சந்தேகிக்க வைக்கின்றது. தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். - என்றார். (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் கடந்த ஓராண்டாக நடைபெற்று வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு - கிழக்கில் ஒரு வருடத்துக்கு மேலாக தொடர்ச்சியாக வீதிகளில் இருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடத்தப்பட்டும் கையளிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

முல்லைத்தீவில் உறவுகளால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தின் 366 ஆவது நாள் நேற்றாகும். இதனை முன்னிட்டு உறவுகளால் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிகள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

எமது பிள்ளைகள் எங்கே, அவர்களுக்கு என்ன நடந்தது என்ற முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென அவர்கள் அறிவித்துள்ளனர்.

தமது போராட்டத்துக்கான தீர்வைச் சர்வதேசமே தரவேண்டும்எனக்கோரிஅவர்கள் நேற்று ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு மனு ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் மதகுருமார், சிவில் சமூக பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களில் இருந்தும் வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர். (ஐ-81)

## போராட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 08 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரமமைத்து ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று ஓராண்டைப் பூர்த்தி செய்தது.

இந்நிலையில் மதகுருமார், சிவில் சமூக பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களில் இருந்தும் வந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உட்படப் பல்வேறு தரப்பினர் நேற்று அங்கு ஒன்று கூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாயொருவர் திடீரென மயங்கிச் சரிந்தார். அவரை அங்கிருந்தவர்கள் தாங்கிப் பிடித்துக்கொண்டனர். (ஐ)

## பள்ளிவாசல்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதம் தரித்த இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் உள்ள நான்கு பள்ளிவாசல்களுக்கும், வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்கும் முன் பாக 57 ஆவது படைப் பிரிவின் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பள்ளிவாசல்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெறலாம்எனக்கருதியுமே இந்தப் பாதுகாப்பு நேற்றுக் காலை முதல் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினராகத் தெரிவானவரும் முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளருமான சுதர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன், அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

களவாடப்பட்ட 42 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை உடைமையில் வைத்திருந்தமை, களவாடப்பட்ட நகைகள் என்று தெரிந்தும் அவற்றைக் கையாண்டமை ஆகிய இரு குற்றங்களுக்காக விஜயகாந்துக்கு தலா ஒரு வருட சிறைத் தண்டனை விதித்து அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்கவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் நகைகளை அடகு வைப்பதற்கு சிலர் முற்பட்டுள்ளனர். அவர்களிடம் அச்சமயம் சுதர்சிங் விஜயகாந்தும் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலர் ஒருவரின் கொள்ளை போன நகைகளே அவை எனத் தெரியவந்தது. அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேர் மீது 116 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் நால்வர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 4 குற்றவாளிகளுக்குமான தண்டனைத் தீர்ப்பு நேற்று மார்ச் 8ஆம் திகதி வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் வழக்கு நேற்று தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது. 3 பேர் நீதிமன்றில் முன்னிலையாகினர். எனினும் ஒரு குற்றவாளி தலைமறைவாகியுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

தலைமறைவாகிய குற்றவாளிக்கான தண்டனைத் தீர்ப்பு நேற்று மன்றினால் அறிவிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் நடைபெற்ற சமயம் விஜயகாந்த், ஈ.பி.டி.பி. உறுப்பினராக இருந்தார். அவர் கைது செய்யப்பட்டமையை அடுத்து, அவரைத் தமது கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ஈ.பி.டி.பி. நீக்கியது. அதனால் அவர் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியை ஆரம்பித்தார். தற்போது அவரது கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து அதன் உதயசூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டது. அதில் விஜயகாந்த் வெற்றிபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்கு ஐ.தே.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ரஞ்சித் மத்தும பண்டார நேற்று நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை நடந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் அவர், சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

இதனால் சரத் பொன்சேகா பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளார் என அவரது வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு புதிய அமைச்சர் நியமனம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

முன்னதாகச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படவேண்டும் என ஐ.தே.க. கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பல தரப்புப் பேச்சுக்களும் இடம்பெற்றன. ஆயினும் சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க முக்கிய பௌத்த தேரர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், படைத்தரப்பினர், கூட்டு எதிரணியினர் உட்படப் பலரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

சரத் பொன்சேகா சட்டம் ஒழுங்கு அமைச்சரானால் கோட்டாபய ராஜபக்ஷ உட்படப் பலரைச் சிறையில் அடைப்பார் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதனை அடுத்து பொன்சேகாவுக்கு இந்த நியமனத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி பின்னடித்து வந்தார்.

இந்நிலையில் நேற்றுச் சட்டம் ஒழுங்கு அமைச்சராக ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார நியமிக்கப்பட்டார். (ஐ)

## முப்படையினரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் பொலிஸாருக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்கான அதிகாரியாக மேஜர் ஜெனரல் ருக்மன் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் 850 இராணுவத்தினரும், 128 கடற்படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், 250 இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

தேவைப்பட்டால் மேலதிக படையினரை ஏனைய பகுதிகளில் இருந்து அழைக்க முடியும் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் தற்போது இராணுவம், பொலிஸ், சிறப்பு அதிரடிப்படையினர், கடற்படை மற்றும் விமானப்படை அணிகளும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. (ஐ)

## 'வடக்கின் பெரும்போர்'

# சென்.ஜோன்ஸ் முதல் இன்னிங்ஸ் - 217 மத்திய கல்லூரி ஒரு விக்கெட்டுக்கு - 43






'வடக்கின் பெரும்போர்' – என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி பாடசாலை அணிகளுக்கிடையேயான 112ஆவது கிரிக்கெட் துடுப்பாட்டப்போட்டி நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

எஸ்.தசோபன் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி அணியினரும் வி.ஜதுசன் தலைமையில் நடப்பு வெற்றியாளர்களான சென்.ஜோன்ஸ் கல்லூரியினரும் களம் இறங்கினர்.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானபொன்ராஜா ஆகியோர் தலைமையில் நேற்றுக் காலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் வீரர்கள் அறிமுகம் மற்றும் நாணயச்சுழற்சி என்பன இடம்பெற்றன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் எஸ்.தசோபன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 77.1 ஓவர்கள் விளையாடி 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடக்க ஆட்டக்காரரான சொரூபன் சிறப்பாக ஆடி 65 ஓட்டங்களையும் மற்றொரு ஆட்டக்காரரான எல்சான் 32 ஓட்டங்களையும் அதிக பட்டசமாகப் பெற்றுக் கொண்டனர்.

மத்திய கல்லூரி அணி சார்பில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட றியாஸ்கான் மற்றும் ஜெயதர்சன் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர்.

அவர்களில் ஒருவரான றியாஸ்கான் ஐந்து ஓட்டங்களில் ஆட்டமிழந்த நிலையில் நேற்றைய ஆட்டநேர முடிவின்போது யாழ்.மத்திய கல்லூரி அணி 16 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# மாணவருக்கான பட்மிண்டன் போட்டி நாளையும் மறுதினமும்

பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக யாழ்.மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப் பாணப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கென – 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட பிரிவினருக்காக – யாழ்ப்பாணம் பட்மிண்டன் கழகம் நடத்தும் பட் மிண்டன் சுற்றுப் போட்டி நாளையும் மறுதினமும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் உள்ளக அரங்கில் நடைபெறு கின்றது.

இந்தச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களை இதுவரை சமர்ப்பிக்காதோர், தங்களின் பாடசாலை அதிபரின் ஒப்பத்துடனான விண்ணப்பப் படிவங் களை நாளை காலை 9 மணிக்கு மேற்படி போட்டி நடைபெறும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் பிரசன்னமாகி சமர்ப்பித்து, போட்டியில் பங்கு பற்ற முடியும் எனத் தெரிவிக்கப் பட்டது.

மேலதிக தொடர்புகளுக்கு எஸ்.அறிவுச்செல்வன் 077 757 0092 (arivuchchelvan@gmail.com ), எஸ்.காண்டீபன் 077 789 4924, Viber & Whatsapp - 077 337 9465 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.









# இந்து மைந்தர்களின் சமர் இன்று ஆரம்பம்


யாழ். இந்துக் கல்லூரி அணி

**நிற்பவர்கள் வரிசை 1-** என்.ஐங்கரன், கே.நிகேஷ், இ.பரிமளன், யு.மிலுக்ஷன், எஸ்.தனுஷ்ரன், கே.கோமைந்தன்.
**நிற்பவர்கள் வரிசை 2-** எல்.சிவலக்ஷன், ஜே.லினுசங்கரன், வை.விதுஷன், எஸ்.அஞ்சிகன், எஸ்.பிருந்தவன், பி.ஜெயபிரகாஷ், எஸ்.சந்துரு, எஸ்.சாருஜன், யு.கேதீஸ், கே.விதுர்ஷன், பி.கஜானந்த்
**ஆசனத்தில் இடமிருந்து வலமாக-** கே.கே.வாசன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), கே.சந்தோஷ் (உப அணித்தலைவர்), சதா.நிமலன் (அதிபர்), எம்.கோபிராம் (அணித் தலைவர்),
எ.ஜெயந்தன்(அணிப் பொறுப்பாசிரியர்), பி.ஹரிபவன் (அணிப் பயிற்றுவிப்பாளர்)


கொழும்பு இந்துக் கல்லூரி அணி

**ஆசனத்தில் இடமிருந்து வலமாக-** ரி.சிவகார்த்திகேயன் (உதவிப்பயிற்றுவிப்பாளர்), பி.சிவசுதன் (பொறுப்பாசிரியர்), எஸ்.சறோன்(அணித்தலைவர்), பி.பரமேஸ்வரன் (அதிபர்), எஸ்.சுந்தரலிங்கம் (உப அதிபர்) ரி.கௌசிகன்(விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), பி.பெர்னாண்டோ (பிரதான பயிற்றுவிப்பாளர்)
**நிற்பவர்கள் வரிசை 1-** எம்.ஹரீஷன், பி.ஹகாஷ், எஸ்.தனுஷன், எம்.அனுஷன் ராஜ், எ.ஹரிஹரன், எஸ்.முகுந்தன், ஆர்.செவாக், எஸ்.ஹரீந்திரன்,
**நிற்பவர்கள் வரிசை 2-** வி.கிஷோத், எம்.பிரவீன் குமார், எஸ்.மயூரன், ஜி.டினேஷ், பி.விராஜ், எஸ்.கெனிஷன்

யாழ். மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியான இந்துவின் மைந்தர்களின் பெருஞ்சமர் இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஆரம்பமான இப்போட்டி நாட்டின் சூழ்நிலை காரணமாக இடையில் பல ஆண் டுகள் நடைபெறாது தடைப்பட்டு இருந்தது. இந்த நிலையில், 9 ஆவது முறையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் இது நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 3 முறை இந்துக் கல்லூரி, கொழும்பு அணியும் ஒரு முறை யாழ். இந்துவும் வெற்றி பெற்றுள்ளன. 4 முறை போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவுக்கு வந்துள்ளன. இம்முறை போட்டிக்காக மிகக் கடுமையாக இரண்டு அணிகளும் பயிற்சி மேற்கொள்வது மட்டுமின்றி, திறமையான பல வீரர்களை முழுமையான தயார் நிலையில் வைத்திருக்கின்றன.

எனவே, இந்த முறை போட்டி மிக விறு விறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரு பாடசாலைகளுக்கிடையிலான பெருஞ்சமரில் துடுப்பாட்டம் மட்டுமின்றி 'சொல்லாடல்' என்கின்ற விவாதப் போட்டியும் உதைப்பந்தாட்டப் போட்டியும் நிகழ்வது வழக்கம். இம்முறையும் 'சொல்லாடல்' 2018 விவாதம் 9 ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை 6.31 மணிக்கு யாழ். இந்துவின் சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ் தரப்பின் முன்னணிப் பாடசாலைகள் என்பதனாலும், அகில இலங்கை ரீதியில் வெற்றி விவாத அணிகள் என்பதனாலும் இந்த விவாதம் பல ராலும் கவனிக்கப்படுகிறது. மேலும் ஒருங்கமைப்பாளர்களும் சமூகநலன், அரசியல் சார்ந்த தலைப்புக்களே விவாத கருப்பொருளாகக் கொடுப்பதாலும் மக்களையும் தமிழ்த் தலைவர்களையும் இது சென்றடைந்து இருந்தது. கடந்த முறை நிகழ்ந்த விவாதம் பல தரப்பினராலும் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பேசு பொருளாக மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விளம்பர அனுசரணையாளர்கள்













இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.